சிவமயம்

குமரகுருபரன்



த-3117

மலர் 24] 1973-ஆ ஐப்பசி மீ 1-ம௳ (17-10-73) [இ
தனிப்பிரதி 25 பைசா வருடச் சந்தா ரூ. 3

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

2 திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை–85

5. திரு. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை–2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	திருவுந்தியார்–உரை விளக்கம் ...	461
2.	விபூதி பூசிய வேடதாரிகள் ...	464
3.	அருள்மொழி அமுது ...	469
4.	கருணை உள்ளம் ...	474
5.	அபிராமிபட்டர்-ஓர் ஆய்வு	480
6.	வள்ளுவர் வாய்மொழியில் வள்ளலார்	485
7.	இறை அன்பு ...	491
8.	திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் விநாயக சதுர்த்தி ஏறுபடி நிதி ரூ. 5,000	498
9.	மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை	85

T-UN-436

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 24 | பிரமாதீச ஹூ ஐப்பசி மீ 1உ [17-10-73] | இதழ் 10

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனுர்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

பாலகவி

திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற. (3)

பருவம்வரும்வரை அறிவுக்கறிவாய் உள்நின்று உணர்த்தி வந்த சிவபெருமான், பருவம் வந்தவுடன் புறத்தே மாநுட வடிவத்தில் கண்கூடாக ஞானகிரியராகி எழுந்தருளிவர, அவரை மெய்யன்போடு வழிபட்டு, அவர்செய்தருளிய தீக்ஷை யால் சஞ்சித கன்மத்தையும், தேகத்துடன் பிராரத்த கன்மத் தையும், அவர் நிறுத்திய அருட்குறிப்பினால் ஆகாமிய கன்மத் தையும் போக்கித், தற்போதம் நீங்கிய ஞான நிட்டையைக் கூடிச் சிவமாயினோர், பேரின்பத்தை நுகர்ந்து வாழ்வரே யல்லாமல். ஒரு காலமும் தாயினுடைய கர்ப்பத்தை அடை யார். இவர்களுக்குப் பிறப்பு, இறப்புக்கள் இல்லை.

ஞானசிரியனைப் பரம்பிரமமென்றும், பரசிவனென்றும், பரஞானமென்றும், பராபரனென்றும், அரன்தரும் சீர் நிலை எல்லாம் இவனென்றும் கொண்டு, வழிபட்டால் சிவமாகும் பேற்றைப் பெறலாமென்று, அருள் நூல்கள் கூறும். ஆசிரி யரை மனிதராக எண்ணுபவர், சிவத்துரோகியராவர். குருத் துரோகம், சிவத்துரோகத்தைவிடக் கொடியது. ஈசனுக்கு இழைத்த குற்றத்தைத், தேசிகனை வழிபட்டுத் தீர்த்துக் கொள்ளலாம். தேசிகனுக்கு இழைத்த குற்றம், அவனாலன்றி வேறு எவராலும் தீர்க்க முடியாதது. ஆசிரியனுக்குச் செய்யும் வழிபாடு, ஆண்டவனுக்குச் சென்று சேரும். சிவா நுக்கிரகமான தீக்ஷையை ஆசிரியர்முகமாகப் பெற்றவர் களுக்கே கன்மமல நீக்கமும், அதனால் பிறப்பிறப் பறுதல்பற்றி நிகழும் மாயாமல நீக்கமும் அதன் தொடர்பாக ஆணவமல நீக்கமும் ஏற்பட்டுப், பிறப்பிறப்பில்லாத சிவத்தை அடைந்து, பேரின்பத்தை நுகர்ந்து வாழும்பேறு சித்திக்கும். ஞானசிரி யரைச் சிவமெனவே வழிபட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் ஆகிய கன்மங்களை முடித்துச், சிவ ஞானமாகிய அநுபூதி ஞானம் கைவரப் பெற்றோர் பிறப் பிறப்பை ஒழித்துப் பேரின்பத்தைப் பெறுவர்.

எங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற. (4)

தன்னுடைய நிலையையும் சிவசொருபத்தின் உண்மை யையும், அந்தச் சிவனருளே கண்ணாகக் கண்டறிந்து, சிவத்

துடன் வேறற நின்று அனுபவிக்கத்தக்க சேர்க்கை உண்டானபோது, அதனல் விளைந்த பேரின்பத்தை, எவ்வாறு வாக்கினுல் எடுத்துக் கூறுவேன்? அது அவ்வாருகவே இருந்தது என்று சொல்லுவதன்றித், தற்போதத்தினுல் அறியவும் சொல்லவும் வருவதன்று.

கருணைக் கடலாகிய சிவபெருமானது காட்டும் உபகாரம் கிடைக்க, அவனது திருவருளையே கண்ணுகக்கொண்டு காண்பவர்க்கு மட்டுமே, ஆன்ம சொரூப சிவசொரூபங்கள் உண்மையாகப் புலப்படும். அதன் வழியாக ஆன்மாவும், சிவமும் வேறற நின்று அநுபவிக்கும் பேரின்பம் விளையும் அந்தச் சிவபோகம் அதனை அநுபவிக்கும் பேறு பெற்றவர்களுக்கே அறியத் தக்கதாயிருக்கும். மற்றையோர் அதனை அறியமாட்டுவாரல்லர். "வெல்லம் இனிப்புச் சுவையை உடையது" என்று அறிவிக்க முடியுமேயன்றி, இனிப்புச் சுவை எப்படியிருக்கும் என்று அறிவிக்க முடியாதது அல்லவா? அதுபோலவே, பேரின்ப அநுபவத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாது. 'மகட்குத் தாய்தன் மணளனேடாடிய, சுகத்தைச் சொல்லென்றுல் சொல்லுமா றெங்ஙனே" எனத் திருமூல தேவரும், "கன்னிகை தான் காமரசம் சாணுள், மருவி இருவரும் புணர்ந்த இன்பம் வாயினுல் பேசரிது மணந்தவர் தாம் உணர்வர்" என அருணந்தி சிவமும் "அரும்போநன்மணம் காட்டும், காமரசம் கன்னி அறிவாளோ, அபக்குவர்க்கோ அந்நலம்தான் விளங்கும்" எனத் தாயுமான சுவாமிகளும் இவ்வுண்மையைத்தெளிவுபடுத்தியுள்ளனர். மாயையின் விளைவுகளாகிய மனவாக்குக் காயங்களால், அவற்றிற்கு அப்பாற்பட்ட பேரின்பம் அநுபவிக்கக்கூடாதது, அதனை ஒருவனுக்குக்கன்மம் துலைபோல் ஒத்து, மலபரிபாகம் உண்டாகி, ஞானதேசிகரது திருவடிப் பேற்றினுல் சிவசொரூபம் உணரப்பெற்று, அந்தச் சிவத்துடன் இரண்டறக் கூடிப் பேரின்பத்தில் அழுந்தும் வாய்ப்பு உண்டானபோது அது எப்படி இருக்குமோ; அப்படியிருந்தது என்று வாயினுல் சொல்லலாம் அவ்வாறின்றி அதனை அளவுபடுத்தி, அபக்குவர்கள் அறியும்படி சொல்ல, ஆன்மஞானம் அறியாது.

——

(தொடரும்)

சிவ சிவ

விபூதி பூசிய வேடதாரிகள்!

திரு. அருணகிரிதாசன் P. S இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம்.

வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்! உங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறு நிழல்போல்
கையிற் பொருளு முதவாதுகாண் உம் கடை வழிக்கே!

''ஓடி ஓடித் திரிந்து மெய்யாகவும் பொய்யாகவும் சேமிக்கும் பொருள்களெல்லாம் உடலைப் பிரிந்து செல்லும் உயிரோடு தொடர்ந்து வருவன அல்ல! ஏழை, எளியவர்களின் துயரங்களில் பங்கேற்று அவர்களுக்குச் செய்யும் மனம் ஒப்பிய தருமமே உயிருக்குத் துணையாக வந்து உதவி புரியும்! ஆகையினாலே ஆறுமுகப் பெருமானை மெய்யன்புடன் நேசித்து, வணங்கி வாழ்த்தி வறிஞருக்கு என்றும் தருமம் செய்புங்கள்! இறைவனை நினைத்துச் செய்யும் தருமமே தலை சிறந்ததாகும்!''

அருணகிரியாரின் இந்த நல்லுபதேசம் மக்கள் சமுதாயத்திற்கு குறிப்பாக ஒரு சில கும்பலுக்கு மிகவும் பயனைத் தரக்கூடியதாக அமைந்துள்ளது. 'குமரனை மெய்யன்பினால் பாடிக் கசிந்து' என்பார் அருணகிரியார். 'இறைவனை மெய்யன்புடன் 'நேசி' என்றே அடியார்கள் நல்லுரை பகர்வார்கள். பொய்யன்பு கொண்ட வேடதாரிகளும் புல்லர்களும் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தவே அடியார்கள் இவ்வாறு அருளியுள்ளார்கள்.

கடவுள் இல்லையென்று வாதிப்பவர்களாலோ கடவுள் பொம்மைகளை உடைப்பவர்களாலோ அல்லது கடவுளையே நினைக்காதவர்களாலோ நன்மக்கள் சமுதாயத்திற்கு எவ்வித தீமைகளும் ஏற்படாது! அவர்களால் இறைபணி இன்று எங்கும் விரிந்து வளருகிறது என்றே கூறலாம்! குத்து விளக்கிலுள்ள தூண்டு குச்சியாகவே அவர்கள் செயல்படுகிறார்கள் என்றால் மிகையாகாது.

பொய்யன்பு கொண்டு கடவுள் திருநாமங்களைக் கூறி வயிற்றை வளர்க்கும் வீணர்கள் திருநாமம், திருவெண்ணீறு பூசிய வேடதாரிகள்தான் நன்மக்கள் சமுதாயத்திற்கு பெரும் துரோகிகளாக, வஞ்சகர்களாக அமைகிறார்கள் என்றால் சற்று ஆச்சரியமாக இருக்கும்!

எல்லா சமயங்களிலும் இந்தத் துரோகக் கும்பல் 'மெய்யன்பர்' வேடம் பூண்டு விளையாடி வருவதைக் காணலாம். மரத்தை அரிக்கும் கரையானைப் போன்ற இவர்கள் கூறுவது கடவுளின் திருநாமம்! செய்வது கயவாளித்தனம்! இவர்கள் அடியார்களா: அடிவாங்க வேண்டியவர்களா!

இதோ ஒரு மெய்யன்பர்...

பருத்ததொந்தி! வழுக்கைத்தலை! நெற்றியிலே முப்பட்டையாக வெண்ணிற விபூதி! அதன் நடுவில் ரூபாய் அளவுக்குக் குங்குமம்! கழுத்திலே தங்கப்பூண் போட்ட மணிமாலை! இடுப்பிலே பஞ்ச கச்சமாகப் பட்டு வேட்டி! சரிகை அங்கவஸ்திரம்! முருகப் பெருமானே நேரில் தோன்றினாற்போல் அவர் காணப்பட்டார்!

வாய் முணுமுணுக்க முருகன் சந்நிதியை மும்முறை வலம் வந்தார், படபடவென்று பல தேங்காய்களை உடைத்தார்! எவ்வளவு பக்தி இறைவனின் மீது!

எண்ணெய் வியாபாரத்தில் அவர் ஒரு பெரும் புள்ளி! முருகப் பெருமானின் திருஉருவம் ஒட்டப்பட்ட நூற்றுக் கணக்கான டின்கள் அவர்கடையில் எண்ணெய்யுடன் இருந்தன. கடையில் குமரனின் பெரிய திருஉருவப்படம் வேறு வைக்கப்பட்டிருந்தது. ஒரு சிறு அகல்விளக்கும் எரிந்து கொண்டிருந்தது. முருக பூசையை முடித்த அந்தப் பெரும் புள்ளி கல்லாப்பெட்டியை கும்பிட்டு அமர்ந்தார்.

அடுத்தகணம் அக்கடைக்கு வந்து சேர்ந்தார் சர்க்கார் அதிகாரியொருவர்! அந்தப்பெரும் புள்ளிக்கு - 'மெய்யன்பருக்கு'-விபூதி பூசிய வேடதாரிக்கு கை கால்கள் நடுக்கமெடுத்தன! எண்ணெய்க்கடை சீல் வைக்கப்பட்டது! ஏன்! எண்ணெயில் கலப்படம்! விபூதி பூசிய வேடதாரியின் கரங்கள் சிறையின் கம்பிகளை எண்ணிக் கொண்டிருந்தன!

உண்மைக்கும் நேர்மைக்கும் அடையாளச் சின்னமான திருவெண்ணீறும் குங்குமமும் இவர் நெற்றிக்குத் தேவை தானா! பத்தினிப் போர்வையிலே விபசாரமா! ஆண்டவனை ஏமாற்ற முடியுமா? ஆறுமுகன் இவரை மன்னிப்பாரா! ஆறுமுகனுக்கு இவர் ஏற்றிய அகல்விளக்கு இவரை எரிக்கும் கொள்ளிக்குத் தீயாக அல்லவா அமைந்து விட்டது! அந்தோ பரிதாபம்!

பாலில் கலப்படம்! நெய்யில் கலப்படம்! அரிசியில் கலப்படம்! மருந்துகளில் கலப்படம்! என்று பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்தால் மனம் குமுறுகிறது! ஆண்டவனின் திருநாமங்களைக் கூறிக்கொண்டு அநாகரீகச் செயல்களில் ஈடுபடும் இந்த 'அவமானச் சின்னங்கள்'-விபூதி பூசிய வேடதாரிகள்-மக்களிடமும் கலப்படத்தை ஏற்படுத்தி அடியார் யார்; அடி வாங்க வேண்டியவர் யார் என்ற குழப்ப நிலையை உண்டாக்கி விட்டார்கள். திருநாமமும் திருவெண்ணீறும் குங்குமமும் திருட்டுத் தனத்தை மறைக்கவா!

மக்களை ஏய்த்துத் திரியும் இம் மடையர்களின், துரோகிகளின் வாழ்க்கை, முடிவில் பரிதாபத்திற்குரியதாக ஆகிவிடும் என்ற உண்மையை அவர்களே அறியார்கள் போலும்!

அந்த அயோக்கியர்களின் முடிவு எப்படி அமையும்! இராமலிங்க வள்ளலார் கூறுவார்:

> எந்தை நினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
> ஏக்கற்றிருக்கும் வெறுவாய்!

புரட்டுத் தனமாகச் சேமித்து வைத்தப் பொருள்களெல்லாம் முற்றும் பறிபோக. ஒரு வேளைக்குக் கூழ் கூடக் கிடைக்காமல் தெருத் தெருவாக அலைந்து வாடி வெந்து போவார்கள் பொய்யன்புடன் இறைவனையணுகும் புல்லர்கள்!

> எங்கள் பெருமான் உனை வணங்காத மூடர்தலை
> இகழ் விறகெடுக்கும் தலை!

தங்கள் தலை பிணத்தை எரிக்கும் விறகுகளைச் சுமக்க, உண்மையாக இறைவனை வணங்காத மூடர்கள் வீதி வீதியாக அலைந்து அவதிப் படுவார்கள்!

கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்த அழுகண்!

கடவுளைப் பக்தியுடன் காணாத கயவர்கள் துக்கத்தில் மூழ்கி, கண்ணீர் பெருக அழுது கொண்டே இருப்பார்கள்! அலைகடல் துரும்புபோல் அலைக்குள்ளாவர்!

கடவுள் நின்புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத் திழவு கேட்கும் செவி!

இறைவனின் புகழை மெய்யாகவே மடுக்காத சோம்பேறிகளின் செவிகள் என்றும் சாவுச் செய்திகளைக் கேட்டு கேட்டு அழுகிப் போகும்!

பந்தமற நினைணுப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீரென நடுங்கும் நெஞ்சம்!

ஆண்டவனுக்கு அன்புடன் அர்ப்பணிக்கப் படாத படு பாவிகளின் மனம் குழம்பி நடுங்கிக் கொண்டேயிருக்கும்! நிலைதடுமாறும்! பைத்தியக்காரர்களாக உருவெடுத்துப் பரிகாசத்துக்கு இப்பாவிகள் ஆளாவார்கள்!

பரம நின்திருமுன்னர் குவியாத வஞ்சகர் கை
பலியேற்க நீள் கொடுங்கை!

பரமனுக்கு முன் பணிவோடு குவியாத வஞ்சகர்களின் கரங்கள் பிச்சை கேட்க நீட்டும் கரங்களாக அமைந்துவிடும்! பிச்சையெடுத்து வாழ வேண்டிய அவல நிலையை எய்துவார்கள்!

இந்த வஞ்சகர்கள், முட்டாள்கள், மடையர்கள், சமூகத் துரோகிகள், நாசகாரக் கும்பல்கள், இறைவன் படைப்பில் தோன்றிய உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதாலும் பதுக்குவதாலும் தங்களுக்குத் தேவையான 'சீட்டுகளை' இப்பொழுதே நரகத்தில் 'ரிசர்வ்' செய்து கொள்கிறார்கள் போலும்! என்ன அறியாமை!

மக்களுக்குத் தேவையான பொருள்களை மறைத்து கொள்ளை லாபத்தில் விற்று பொருள் சேர்த்து மாடமாளிகை கட்டி ஆடம்பர வாழ்க்கை நடத்த நினைக்கும் உதிரிகளுக்கு பட்டினத்தடிகள் நல்ல அறிவுரைகளை எடுத்தருள்வார்:

இருப்பது பொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை யுன்னுதே பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தான்இருக்கும் தான்!

"மடநெஞ்சமே! பொய்யும் புரட்டும் பேசி மக்களை ஏமாற்றி பொருளைக் குவித்து இந்த உடலை கொழுக்கட்டை போல் வளர்ப்பதில் என்ன பயனைக் கண்டாய்! இந்த உடல் உனக்குச் சொந்தமானதென்று நினையாதே! இந்த கொழுக் கட்டை உடலை, குடல்வேறு, சதை வேருகப் பிரித்துவிருந்து கொள்வதற்காகவே இடுகாட்டில் நாய்களும் நரிகளும் பேய் களும் கழுகுகளும் வட்டமிட்டுச் சுற்றி வருகின்றன! அந்த நாளை நீ சந்திக்கும்வரை இவ்வுலகில் தீமைகளைப் பற்றி நினை யாதே! யாருக்கும் தீமை தரும் செயல்களைப் புரியாதே!"

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்து பணம் குவிக்கும் புல்லர்களும் கொள்ளைலாபமடிக்கும் கள்ளர்களும் பட்டினத்தடிகளாரின் திருவாக்கைப் புரிந்து கொண்டு மனம் திருந்துவார்களா!

பிறர்க்கின்னு முற்பகல் செய்யின், தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும். —வள்ளுவர்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டு ரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர் வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 4–00 வெளிநாடு ரூ. 6-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

சிவ சிவ]

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

4. தருமம் காத்த தண்ணளியான்

திருவாரூரை ஆண்டுவந்தான் சூரியகுலத் தோன்றலான மனுச்சோழன். கண்ணை இமைகள் காத்தல் போல மன்னுயிரைத் தன்னுயிராகப் போற்றிக்காத்தான் அத்தருமவேந்தன். சிவபெருமானுக்கு வேண்டிய படித்தரங்களைச் செய்தான். தெய்வ காரியங்கள் குறைந்தால் நாடு நலியும், சமுத்திரம் கூடவற்றி விடும் என்பர் பெரியோர்.

முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள: வாரிவளங் குன்றும்:
கன்னம் களவு மிகுத்திடும்: காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. (*திருமந்திரம்*)

கோயிலுக்காக அடியார்கள் ஏற்படுத்திய தருமங்களை எவரும் தீண்டக்கூடாது அவற்றை வேறு காரியங்களுக்குச் செலவு செய்யக் கூடாது என்பது குறிப்பு.

அவ்வாறு அரசாட்சிசெய்துவரும் மனுநீதிச் சோழனுக்கு அருமையான மகன் ஒருவன் பிறந்தான். அருந்தவத்தால் பிறந்த சிங்கம் போன்ற அச்சிறுவன் முறையே நன்குவளர்ந்து சகலகலாவல்லவனாக விளங்கினான். வளர்பிறை மதியமாக வளர்ந்த அக்குழந்தை இளவரசுப் பட்டம் கட்டிக்கொள்ளும் பருவம் அடைந்த காலத்தில் ஒருநாள் தேரேறித் தெருவில் வந்தான். மனுச்சோழனுடைய உண்மையான நிலையைச் சோதிப்பதற்கு தரும தேவதையே வந்தது போலும்! அழகிய ஒரு பசுங்கன்று எவரும் காணாதபடி அந்தத் தெருவில் ஓடி வந்து தேரின் சக்கரத்தில் மாட்டிக்கொண்டு விண்ணுலகு அடைந்தது. அதுகண்டு தாய்ப்பசு அலறியது.

அம்புனிற்று ஆவின்கன்று ஓர் அபாயத்தின் ஊடுபோகி
செம்பொனின் தேர்க்கால் மீது விசையினுல் செல்லப்பட்டே

உம்பரின் அடையக் கண்டு அங்கு உருகுதாய் அலமந்துஓடி
வெம்பிடும்: அலறும்: சோரும்: மெய்ந் நடுக்குற்று வீழும்.

இறைவனே பசுவாகவும் இயமதருமன் கன்ருகவும் வந்த தாகக் கூறுவார். கன்று மறைந்தது பற்றிக் கூறுங்கால் விண் ணுலகடைந்தது என்று அமங்கலம் இல்லாது கூறும்நயம் இன் புறத்தக்கது. அவச்சொல் இல்லாது மங்கல மொழிகளிலேயே கதை கூறுகிருர் இக்கவி நாயகர். மேலும் கன்ருக வந்தது இயமன் ஆனபடியால் தன் உலகமான விண்ணுலகம் புகுந் தது என்பதும் சிறப்புடையது.

கன்றையிழந்த தாய் கதறுவது கண்டு அரசனின் மகன் தவிக்கிருன். பசுவைப் பார்த்துப் பதைக்கின்ருன் கன்றைக் கண்டு கண்ணீர் விடுகிருன். "தரும உருவான என்தந்தைக் குப் பழியுண்டாக்குவதற்காகவா நான் அவரது மகனுகப் பிறந்தேன்?" எனக் கதறுகிருன். என்தந்தை இதை அறிவ தற்கு முன் இதற்கான பரிகாரம் செய்வேனென்ற எண்ணத் துடன் அந்தணர் இருப்பிடம் சென்ருன். இது இவ்வாருக, துயருற்ற பசுகதறிக் கொண்டே சென்று அரசனது அரண் மனை வாயிலில் கட்டப்பட்ட மணியைக் கொம்பினுல் அடித் தது. அரசன் தனது குடிமக்கள் ஏதாவது மனக்குறை ஏற் பட்டால் தன்னிடம் நேரில் வந்து அழைத்துத் தெரிவிப்பதற் காக ஒருமணியை அரண்மனை வாயிலில் கட்டி வைப்பது வழக்கம் அதை ஆராய்ச்சிமணி என்பர். ஒரு பசுமாடு ஆராய்ச்சி மணியை அடிக்கும் அறிவுடையதாக இருக்குமோ என எண்ணலாம். இக்கதையில் இறைவனே பசுவாக வந் தார் எனப்படுவதால், பசு மணியை அடித்தது பொருந்தும். எனது சொந்த அனுபவத்தில் பசு தனது வாய்திறந்து பேசு வதற்கு இறைவன் சக்தியளிக்கவில்லையே தவிர, மனிதரைப் போல எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் சக்தி பசுவிற்கு உண்டுஎன நான் கூறமுடியும் மணி அடிக்கப்படும் போது இரண்டு புறமும் அடிபட, எதிரொலி ஒன்றுஆக மூன்றுஒலி கள் கிளம்பும். இதை மைந்தன்மீது பழிசாற்றும் முழக்கமோ? என்றும் "பாவத்தின் ஆரவாரமோ?" என்றும் "அரசகுமா ரனின் உயிரைக் கொள்ள வரும்யமனது வாகனமான எருமை

யின் கழுத்தில் உள்ள மணியின் ஒசையோ?'' என்றூர், ஆராய்ச்சி மணியின் ஒசை மன்னவனின் காதில் விழுந்தது.

பழிப்பறை முழக்கோ? ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ? வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ? என்னத் தன் கடைமுன் கோளாத்
தெழித்தெழும் ஒசை மன்னன் செவிப் புலம்புக்கம் போது.

தனது சிம்மாதானத்தை விட்டு இறங்கி வரும்போதே, காவலர்கள் எதிர்பட்டு ''இறைவனே! ஆராய்ச்சி மணியை ஒருபசு அடித்தது'' என்றனர் பசுவின் கண்ணீரைத் தன் கண்ணுல் கண்டு, ஆராய்ச்சி மணிஒசையைக் காதால்கேட்ட மன்னன், வருமுன்காக்கும் கடமையுள்ள அமைச்சரைக் இகழ்ச்சியுடன் நோக்க, நன்கு தேர்ந்த நல்லோனுன அமைச்சன் ஒருவன் ''அரசர் பெரும! தங்களது புதல்வன் நிறைய ஒசைசெய்யும் மணிகள் கட்டப்பட்ட தேரின்மேல் ஏறி, அளவில்லாத சேனை சூழ அரசர் தெருவில் வந்தார். மணிஒசையையும் அலட்சியம் செய்து பெருங் கூட்டத்திற்கு நடுவே அரசர் தெருவிற்கு வர வேண்டாத கன்று ஒன்று தேர்க்காலில் தானேவந்து புகுந்து இறந்ததால் இத்தாய்ப்பசு கதறுகிறது'' என்று அரசகுமாரன் மீது குற்றமேயில்லை. அசாக்கிரதையான கன்றுதான்காரணம் எனப் பொருள்படக் கூறினுன்.

வளவ! நின்புதல்வன் ஆங்கோர்மணி நெடுந்தேர் மேல்ஏறி
அன்வில் தேர்த்தானை சூழ அரசுலாம் தெருவிற் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால் இடைப் புகுந்து இறந்தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித்த தன்மை என்றுன்.

பசுவைக் கண்டு ஏற்கனவே இரக்கங் கொண்ட அரசன் இந்தச் செய்தி அறிந்ததும் அப்பசு மாதிரியே துயரமடைந்தனன் தலைவரை விஷம் ஏறிய மாதிரி தவித்து ''எவ்வாறுஇது நேர்ந்தது? என் செங்கோன்மை நன்றுயிருக்கிறது'' என நொந்து கொண்டான். மன்னவன் துயரங்கண்ட மந்திரிகள் ''கோவதை செய்ததற்கான பரிகாரம் செய்து விடலாம்!'' என்றனர். அரசன் இது கேட்டு ''பரிகாரம் செய்தால் கன்றை இழந்த தாய்ப்பசுவிற்கு ஆறுதல் கிட்டுமா? நான் என்மகனை இழப்பேன் என்பதற்கு அஞ்சி நீங்கள் பரிகாரம் செய்யுமாறு கூறுகிறீர்கள். தருமதேவதை இதை ஒப்புமா? அரசன் என்பவன்

தன்னுலோ, தன்னைச் சேர்ந்தவர்களாலோ தன் பகைவராலோ கள்வராலோ, மற்ற உயிர்களால் தன் குடிகளுக்கு ஏற்படும் பயத்தை தீர்த்து கடமை செய்து தருமத்தை நிலைநாட்டுவது கடமையன்றோ?

> மாநிலங் காவலனுவான் மன்னுயிர் காக்கும் காலை
> தான்: அதனுக்கு இடையூறு தன்னுல்: தன் பரிசனத்தால்:
> ஊனமிகு பகைதிறத்தால்: கள்வரால்: உயிர்தம்மால்:
> ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனே?

இந்தப் பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிட்டு உலக நாடுகளின் சபைக்கு அனுப்பினுல் நான் பெரியவன் நீ பெரியவன் என்ற மனேபாவத்துடன் போரிடும் நாட்டவர்கள் மக்கள் நலனைக் கருதி பூசலை யொழித்துத் தத்தம் கடைமைகளைச் செய்வாரன்றோ?] என்மகன் செய்த குற்றத்திற்கு பரிகாரம் செய்தல் என்ன நீதி? வேறெருவன் இதே குற்றம் செய்தால் அவனுக்கு மரண தண்டனையன்றோ விதிப்பேன்? என்மகனுக்காக ஒரு நீதியா? மனுகுலத்தில் பிறந்தநான் மனு நீதியை மீறுவதா? "என்றுன் அரசன்" மகாராஜா! இவ்வாறு நிகழ்ந்தால் பரிகாரம் செய் அதுதான் வழக்கம்! "என்ருர் அரசன் மிகவும் வேதனையடைந்து" இதேமாதிரி முன் எப்போது நிகழ்ந்தது? எந்த நாட்டில் பசு ஆராய்ச்சி மணியை அடித்தது? திருவாரூரில் பிறந்தவர் எல்லாம் சிவகணங்கள். அவ்வுயிர்களில் ஒன்றை என்மகன் கொன்றுன். எனவே பசுவின் துயரம் எனக்கு ஏற்படுமாறு செய்வேன்" எனக்கூறி மந்திரிகளில் ஒருவரை அழைத்து "என்மகனை அதே வீதியில் ஒரு தேர்க்காலில் அரைத்துக் கொல்" எனக் கட்டளையிட, அம்மந்திரி அரசன் ஆணைக்கு அஞ்சி, அதே நேரத்தில் அரச குமாரனைக் கொல்ல மனமில்லாது தற்கொலை செய்து கொண்டான். மனுவேந்தன் அதற்கும் அஞ்சாது தன்மகனை தண்டிப்பதற்கு தானே நேரில் புறப்பட்டான். தனக்கு ஒரே மகன் என்பதையும் மறந்தான். தருமத்தின் வழி நடப்பது தன்கடமை என எண்ணித் தன்மகனுடைய மார்பின் மீது தேரைச் செலுத்தினுன். தருமந்தவருது அரசாட்சி செய்வது மிகவும் அரிது எளியகாரியமில்லை.

ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்.
தருமந்தன் வழிச்செல்கை கடன் என்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழியுற வூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்.

இந்தக் காட்சியைக் காணச் சகியாமல் உலகினர் கண்ணீர் மழையாக விட்டனர். தேவர்கள் மலர் பொழிந்தனர். இடப வாகனத்தில் அ சனுக்கு காட்சி கொடுத்தான். சடையில் இளம்பிறையும், இடது பக்கத்தில் அம்மையும், பூதகணங்கள் சூழ நிற்பது கண்டு அரசன் துதித்து வணங்க இறைவன் அருள்பாலித்தான்.

சடை மருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்கும் திருநுதலும்
இடைமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும் முன்கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல் வேந்தர்க்கருள் கொடுத்தான்.

அந்நேரத்தில் கன்றும், மந்திரியும், அரசகுமாரனும் உயிர் பெற்று மீண்டும் எழுந்தனர். அரசன் திகைத்தான். முன் னவனே முன் நின்ருல் முடியாத பொருள் உளதோ? என்கிருர் கவிஞர். மகனைத் தழுவினுன் மன்னன். கன்றையணைத்து பால் கொடுத்துக் களிப்படைந்தது பசு. இப்படி அருள் செய்யும் பெருமானை உலகெலாம் துதிக்கும் இப்படிப்பட்ட திருவாரூரில் இருப்பது இறைவனது பூங்கோயில். சோழநாட் டினையும் அதன் முக்கிய நகரான திருவாரூரையும் அங்குள்ள கோயிலையும் நமக்கு அறிமுகப்படுத்திய கவிஞர்பெருமான் அங்குள்ள தேவாசிரியன் என்ற மண்டபத்தைக்காட்டி அங்கு எழுந்தருளியுள்ள சிவநேசச் செல்வர்களான பெரியோர்களை நமக்கு தரிசனம் செய்து வைத்து அவர்களது பெருமையைக் கூறுகின்ருர்.

அப்பெரியோர்களின் மனப்பரிசுத்தமும் அவர்கள் அணிந் துள்ள வெண்ணீற்றின் ஒளியும் பாற்கடல் மாதிரி அவ் விடத்தை வெண்மையாக்கிக் காட்டியதுடன் அவர்கள் பஞ் சாட்சர செபம்செய்யும் ஓசைபாற்கடலின் அலைஓசைபோலி ருந்தது. பேசமுடியாத பெருமையுடைய பெரியார்கள் எது

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

கருணை உள்ளம்

வித்துவான்; திரு. கோ. கோவிந்தசாமி அவர்கள்:
தமிழாசிரியர்
திருமுக்கூடல் [அஞ்சல்]
செங்கற்பட்டு மாவட்டம்

இளையனூர் வேலூர் ஒரு பேரூர் அல்ல, சிற்றூர்தான் எனினும் பெருந்திரளான மக்கள் சூழ்ந்து ஆரவாரமாக இருந்தமையால், அவ்வூர் பேரூர் போலக் காட்சி அளித்தது. மக்கள் சூழ்ந்திருக்கக் காரணம் அங்கு கோயில் கொண்டிருந்த முருகப் பெருமான் திருவிழாவைக் காண்பதற்காகவே யன்றி வேறில்லை. அடிக்கடி அங்கு திருவிழா நடைபெறுவது உண்டு. அவ்வமயம் பச்சன் (ழ)பூமி முருகனை வணங்கி வழிபடுவது

(முன் பக்கத் தொடர்ச்சி)

வந்தாலும் சிவபெருமானை மறவாத நெஞ்சினர். ஓட்டையும் பொன்னையும் ஒன்றாக எண்ணுபவர். இறைவனை வணங்குவதைத் தவிர மோட்சவீடு கிடைத்தாலும் வேண்டாமெனும் பெருமையர். "பெருமானே! குளிரில் உடையாது உடலைக் காக்க ஒரு கந்தை. உப்பில்லாத கஞ்சி. உறங்குவதற்கு ஒரு சிறிய திண்ணை உன் பக்தரின் சேர்க்கை நான் வேறு எது வேண்டினும் நீ அளிக்கக்கூடாது" என குமரகுருபரர் எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் வேண்டியமாதிரி (Simple living and high thinking) இறைவனை வேண்டி வணங்கினவர்.

> ஆரங்கண்டிகை ஆடையும் கந்தையே
> பாரமீசன் பணியல தொன்றிலார்
> ஈரஅன்பினர் யாதும் குறைவிலார்
> வீரமென்றல் விளம்புந்தகையதோ.

இப்பேர்ப்பட்ட உத்தம அடியார்களை ஆலாலசுந்தரர் திருத்தொண்டத்தொகையாற் பாடிவணங்கியது காண்போம்

ஸ்ரீஆனந்தவல்லி சமேத நடராசப்பெருமான் துணை

வழக்கம். அன்று அவ்விதமே மக்கள் அனைவரும் வந்து குழுமி யிருந்தனர். ஒருமுறை பார்த்த உருவம்தானே மீண்டும் ஏன் பார்க்க வேண்டும் என எவரும் எண்ணி இருப்பதில்லை. எத்தனைமுறை பார்த்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்படுகிறதே யன்றி மாறாக எவரும் நினைப்பதில்லை அத்தகைய திருவுருவமுடையவன் முருகனன்றோ முருகு என்றால் அழகு எனக்கூறுவர். முருகன் அழகே உருவானவன் அழகின் திருஉருவை, குறிஞ்சி நிலத் தெய்வத்தை, தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட தூயோனை எத்தனை முறை கண்டாலும் சலிப்பு ஏற்படுவதில்லை. மனதிற்கு அமைதியும், புத்துணர்ச்சியும், எல்லையற்ற மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. முருகா...நீயன்றோ தெய்வம் கண்கண்ட தெய்வம், முருகா.... என்று ஒருமுறை கூறினால் உள்ள மெல்லாம் உருகுகின்றதே. மெய் சிலிர்க்கின்றதே.... உன்னிடம் முறையிட்ட அன்பர்கள் குறைகளை யெல்லாம் உடனே அகற்றும் இறைவா, போற்றி ... போற்றி ... எனக் கூறி முருகனடியார்கள் வழிபட்ட வண்ணமிருந்தனர். சிறிது நேரத்திற்குப் பின் யாரோ ஒருவர்தம் இனிய குரலில் பாடுவதைக் கேட்டு அனைவரும் அப்பாடலைக் கேட்டவாறு முருகப்பெருமான் மீது விழிகளை வைத்து இவ்வுலகையே மறந்திருந்தனர்.

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
    உத்தமர் தம்உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
    உறவு கலவாமை வேண்டும்;
பெருமை பெறுநினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
    பேசா திருக்க வேண்டும்:
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
    பிடியா திருக்க வேண்டும்.
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும் உனை
    மறவாதிருகக வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
    வாழ்வில் நான்வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
    தலம் ஒங்கு கந்தவேளே
தண்முகத்துய்ய மணி உண்முகச் சைவமணி
    சண்முகத் தெய்வ மணியே,''

எனப்பாடிமுடித்துச் சிலநிமிடங்கள் தம்விழிகளை மூடியவாறு இருந்தார். பின்பு வேறொரு பாடலைப் பாடத்துவங்கினர்.

"அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருவார்க் கரியாய் சரணம் சரணம்
மயில் வாகனனே சரணம் சரணம்
கருணாலயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்"

என்ற பாடலை அவர்பாடி முடித்ததும் தீப ஆராதனை நடைபெற்றது. முருகா முருகா.... என்ற மக்களின் ஒலி விண்ணைப் பிளந்தது. முருகனருளைப் பெறுவதற்காக அன்பர்கள் கை கூப்பி நின்றகாட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தம்இனிய குரலால்பாடி மக்கள் உள்ளத்தைக் கவர்ந்த அடியார் குமரப்பர் கூப்பிய கைகளுடன் முருகப் பெருமானை நினைத்த வண்ணமிருந்தார். எவ்வளவு நேரம் அப்படி இருந்தார் என்று அவருக்கே தெரியாது. தம் உணர்வு பெற்றுத்தம்மைச் சுற்றிலும் அவர் நோக்கிய போது, மக்கள் கோயிலுக்குள் வருவதும் போவதுமாக இருந்ததைக் கண்டார் அதனால் முருகனை விட்டுப் பிரிய மனமின்றி வெளியேறிய அப்பெருந்தகை தமது இருப்பிடத்தை அடைந்தார்.

முருகப் பெருமானே சிறந்த தெய்வம் எனஎண்ணி முருகனே கதி என்று வாழ்பவர் குமரப்பர். முருகன் குடி கொண்டுள்ள திருத்தலங்கள் அனைத்தையும் கண்டுகளித்தவர் முருகனடியார்களுக்கு எப்போதும் உதவிபுரிபவர். வறுமையில் உழல வேண்டியநிலை ஏற்படினும் அந்த வறுமையிலும் செம்மையாக வாழக் கருதுபவர். அவருக்கு வாய்த்த இல்லத் துணைவியும் பதி சொற்கடவாத பாவையாக இருந்தமையால் அவருடைய இல்லறம் நல்லறமாக விளங்கியது. நாள்தோறும் முருகனடியார்களை வரவேற்று அகமும் முகமும் மலர அவர்களுக்கு உணவு படைப்பார். அதைத் தம் கடமையாகவும், தாம் பெற்ற பேருகவும் கருதினர்.

ஆறுபடைவீடு கொண்ட முருகன் திருவிழா நடந்து முடிந்த சில நாட்களுக்குப்பின், ஒருநாள் குமரப்பர் வெளியூர்செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது. நெடுந்தொலைவு சென்ற அவர் மீண்டும் தம்ஊருக்குத் திரும்பும்போது இருள் சூழ்ந்துவிட்டது. அதனால் முன்பின் அறிமுகமற்ற ஓர் ஊரில் தங்க நேர்ந்தது. நடந்து வந்தமையால் ஏற்பட்ட களைப்பு அவரை ஒரு திண்ணையின்மீது அமரச்செய்தது. முருகா ... எனக்கூறியவாறு அமர்ந்தார் குமரப்பர். காலை முதல் உணவு உட்கொள்ளாமலிருந்தமையால் கடுமையான பசி அவரை ஆட்கொண்டது. தம்மை நாடி வந்தவர்க்கெல்லாம் உணவு படைத்தவர் அறிமுகமற்ற ஊரில் தம் பசியைப் போக்கிக் கொள்ளும் வழி தெரியாமல் முருகா.... இது என்ன சோதனை எனக்கூறி வருந்தினார். வயிற்றுத்தீத் தணிவதற்காகப் பிறரிடம்சென்று கையேந்திநிற்பதா? அதைவிட இழிவுவேறில்லை. பசியால் என் உயிர் உடலைவிட்டுப் பிரிய நேரினும் கவலையுறேன் எனக்கூறியவாறு அமைதியாக இருக்கமுற்பட்டார். அவர் அவ்விதம் இருக்க முயலினும் வயிறு அமைதியாக இருக்கவில்லை. அவரை வாட்டி வருத்தியது. அதனால் அவருடைய மனம் பற்பல எண்ணியவாறிருந்தது.

எந்நேரமும் முருகா... முருகா எனக்கூறி அவ்விறைவனை வழிபட்டு அவனடியார்களைத் தினமும் உபசரிப்பாயே.... உன்னுடைய பசித்துன்பத்தை அந்த முருகன் அறியாதவனா? நீ அவன் மீது கொண்ட அன்பு தூயஅன்பு. உன்னுடைய அன்பை அந்தக் குமரன் உணரவில்லையா? உணர்ந்திருப்பின் உன் பசிப்பிணியை இந்நேரம் போக்கியிருக்கவேண்டுமே.... ஏன் போக்கவில்லை... தன் மீது அன்பு கொண்டவர்கள் துயரை அகற்றுபவன்... கருணை உள்ளம் படைத்தவன் என்கிறார்களே... உன்னிடம் அப்பெருமானுக்குக் கருணை பிறக்கவில்லையா? உலகையே வாழ்விக்கும் அந்த இறைவன் உனது நிலையை அறிந்து உடனே உதவ முன்வராதது ஏன்? இறைவன் இருப்பது உண்மையல்ல... அதை நம்பி வீண் காலத்தைப் போக்காதே... எல்லாம் வெளித்தோற்றம் கட்டுக்கதை ... ...

இவ்விதம் அவரின் மனம் அவரை இடித்துக்கூறி எள்ளி நகையாடியது. குமரப்பர் தன் மனதிற்கு என்ன பதில்

சொல்வது எனத் தெரியாமல் திகைத்தார். முருகன் என்னைக் கைவிடமாட்டான். நிச்சயம் காப்பாற்றுவான். முருகா.... முருகா... என அவரின் வாய் முணுமுணுத்தது.

அதேசமயம் ...

ஐயா....என்று யாரோ அழைப்பது போல் தோன்றவே, தன்னை அழைப்பவர் யார் என்று நோக்கினர். எதிரே ....

கணவன் மனைவியுமாக இருவர் நின்றிருந்தனர்.

யார் நீங்கள்... என்னையா அழைத்தீர்கள் என்றார் குமரப்பர்.

ஆமாம் நாங்கள்தான் அழைத்தோம். முருகன் கோயிலில் இனிமையாகப்பாடும் குமரப்பர்தானே .... நீங்கள் ... ஆமாம். நீங்கள் யாரென்று தெரியவில்லையே...

நாங்கள் இவ்வூருக்கு அடுத்த ஊரில் வசிப்பவர்கள். உங்களைப்பலமுறை பார்த்து, பாடலையும் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். நீங்கள்தான் எங்களை கவனித்ததில்லை முருகனுடைய பெருமையைக்கூறும் திருத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று பார்த்தோம். இப்போது ஊருக்குச் செல்கிறோம். எதிர்பாராவகையில் உங்களை இங்கே கண்டதால் எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. தாங்கள் மிகவும் சோர்வுடன் அமர்ந்திருப்பதை உணர்கிறோம். இதோ நாங்கள் கொண்டு வந்துள்ள இனிய உணவைஉண்டு, பழங்களைத்தின்று பாலைக் குடித்துப் பசியாறுங்கள். உங்களுடைய பசியைப்போக்கும் பேறு கிடைத்ததை பெறற்கரிய பேறென்றே கருதுகிறோம் எனக்கூறித் தாம் கொண்டுவந்த உணவையும், பழங்களையும், அவர் முன்பு எடுத்து வைத்ததோடு ஓர் குவளையில் பாலையும் ஊற்றி அதனை அவரிடம் அளித்தனர்.

திகைப்புடன் அவர்களை நோக்கிய குமரப்பர் தாம் காண்பது கனவா நனவா என்று சிறிதுநேரம் குழப்பத்திலாழ்ந்தார். காண்பது கனவல்ல என உணர்ந்தபோது பேசுவதற்கும் நா எழாமல் கல்லாய்ச் சமைந்தார். முருகா... நீ என்னைக் கைவிட மாட்டாய் என்பதை நன்கு அறிவேன் எனினும் என்மனம் உன்னைத்தவருகக் கருதிவிட்டது. அதற்

காக வருந்துகிறேன். குன்றுதோறாடும் குமரா....உன்னுடைய கருணையே கருணை...எனத் தமக்குள் கூறியவாறு இருந்தார் குமரப்பர்.

ஐயா...நாங்கள் போகவேண்டும். இந்த உணவை நீங்கள் உண்டால்தான் இங்கிருந்து செல்வோம்...என எதிரே நின்ற தலைவன் தலைவி இருவரும் கூறியதைக் கேட்ட குமரப்பர் அவர்கள் விருப்பத்திற்கிணங்கி தன் அருகே இருந்த உணவை உண்டு முடித்துப் பாலையும் குடித்தார், பழங்களைத்தின்று தம்முடைய பசிப்பிணியைப் போக்கினார்.

குமரப்பர் தாம் அளித்ததை உண்டு முடிக்கும்வரை அங்கேயே நின்றிருந்த தலைவன் தலைவியரிருவரும் அவரை மகிழ்ச்சியுடன் நோக்கிவிட்டு நாங்கள் வருகிறோம் எனக் கூறியவாறு விரைந்து சென்று மறைந்தனர்.

தனக்குதவி செய்தவர்கள் எவ்வழி சென்றனர் என்றே அவரால் உணர இயலவில்லை. முருகப்பெருமகன் வள்ளி யுடன் வந்து தன் துயரைப் போக்கியதாகவே எண்ணி இறும் பூது எய்தினார்...குமரப்பர்,

கருணை உள்ளம் படைத்த முருகா...நீயே எனக்குத் துணை எனக்கூறியதோடு பாடல் ஒன்றையும் பாடிமகிழ்ந் தார்.

''முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்'',

முற்றும்.

அபிராமி பட்டர் - ஓர் ஆய்வு

பேராசிரியர் திரு. மது. ச. விமலானந்தம் M. A. அவர்கள்,
நந்தனம் கலைக்கல்லூரி. சென்னை—35

'பக்தி செய்வீர் செகத்தீரே' என்றழைத்த பாரதியார், 'பயனுண்டு பக்தியினாலே' எனச் சொல்லி வைத்தார், எதிலும் பயன் கருதியே வாழும் இந்தப் பாழாய்ப்போன உலகம் வழிபாட்டினையும் வணிக முறையாக்கும் விந்தை கண்டே, இந்த மொழியும் வந்தது. அந்த வகையில் அன்னை அபிராமியை வணங்குவதால் ஆவது என்ன என்று எதிர்பார்ப்பதில் வியப்பில்லையன்றோ? பட்டரும் தாம் பராசக்தியை வழிபட்டு அடைந்த பயனையும், வழிபடுவோர் அடையக் கூடிய பலன்களையும் தம் அபிராமி அந்தாதி பதிகம் ஆகியவற்றில் அடுக்கிக் கூறியுள்ளார். அவற்றைத் தொகுத்துக் காண்பதன் மூலம், அம்மையை வழிபடுவதன் பெற்றியும் பயனும் இந்த அஞ்ஞான உலகம் அறியுமாக.

நம் வாழ்வு உண்மையில் இரு வகையது; இவ்வுலக வாழ்வு ஒன்று-அஃது உடல்வாழ்வு. மற்றொன்று மறுவுலக வாழ்வு-அஃது உயிர் வாழ்வு. இந்த இருவாழ்விலும் ஒருசேர நலன்கள் அருளுபவள் அம்மை. இந்த உலகில் வாழுமட்டும் சுகவாழ்வு-நல்வாழ்வு வாழ முடியுமா எனக்கேட்போர்க்கு இவ்வுலகில் அரசு நிலை எய்தலாம். அரச வாழ்வு வாழலாம் என்கிறார்.

சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வுந்தொழு வார்எழு பாருக்கும் அதிபரே. (96)

கேவலம் அழியும் இம்மை வாழ்வு மட்டுமா, அம்மை அருளுவாள். அழியா மறுமை வாழ்வினை அளிப்பளோ என உயரிய வாழ்வு வாழ உன்னுவோர்க்கும் அன்னை உவந்தே அளிப்பள் என்கிறார்.

தண்ணளிக் கென்றுமுன் னேபலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றே. (15)

அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்,
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ், சித்திக்குமே. (28)

வந்தே சரணம் புகுமடி யார்க்கு வானுலகம் தந்தே. (34)

இங்கே வள்ளுவர் அறத்தான் வருசிறப்பை அறிவுறுத்துதற்கு,

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும்; அம்மையினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

என அறுதியிட்டு உறுதிகூறத் தோற்றுகிறது. அத்தகு இருமைச் சிறப்பினையும் அளிக்கும் ஆற்றலள் அன்னை.

சரி, பிறந்தால்தானே இவ்வுலகத் துன்பமில்லா வாழ்வு பற்றிய எண்ணம், அவ்வுலக நற்பேறு பற்றிய நினைவு. பிறக்கவே இல்லையென்றால்! புத்தர் கூறியது போன்று பிறப்பால் வருவதுதானே பெருந்துன்பம். பிறப்பு-இறப்பு இல்லையெனில், எக்கவலையும் இல்லையன்றோ? இத்தகு பயனைச்சத்தி அளிப்பளோ எனக்கேட்போர்க்கு அதனையும் அளிப்பாள் என்கிறார் பட்டர். இதோ சான்றுகள்.

இடருந் தவிர்த்துஇமைப் போதுஇருப் பார்.பின்னும் எய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே (48)

...நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் நார்,இந்த வையகத்தே (41)

தாயரின்றி மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை (75)

...இங்கு என்னைரனைப்
படையானை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே (84)

இங்கே அவ்வை அரனிடம் கேட்டவரம் நினைவு கூறத்தக்கது 'பிறவாமை வேண்டும், பிறப்பின் உன்னை மறவாமை வேண்டும்' பட்டரும், 'துய்ய நின்பாதத்து அன்பும் உதவி' (பதிகம்) என்கிறார் இதனையே!

இனி இவ்வுலக வாழ்வினில் அன்னை வழிபாட்டால் அகலக் கூடிய அல்லவைகளைச் சொல்லுகிறார் பாருங்கள்:

கோமள யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேல்உனக்கு என்குறையே (71)

குறித்தேன் மனத்தில்நின் கோலமெல் லாம்,நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி (76)

பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில் இடருந் தவிர்த்து (48)
முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே (101)

கவலை, யமபயம், தீங்கு, மனக்குறை இவை நீங்கும் என்கிறார்! அன்னையை வழிபட்டோர்க்கு என்ன குறை என்றும் கேட்கிறார்.

அடுத்து வரக்கூடிய நல்லவைகளையும் நலன்களையும் பலன்களாகப் பட்டியல் தருகிறார்; 'பொருளில்லார்க்கு இவ் வுலகம் இல்லையன்றோ? எனவே எடுத்த எடுப்பிலும் எண்ணற்ற இடங்களிலும் செல்வம் தருவாள் என்கிறார். 'தனம் தரும்' (69) 'தொலையாத நிதியமும்' (பதிகம்) பொருட்செல்வம் மட்டும் போதுமா? அறிவுச் செல்வமும் அவசியமன்றோ? எனவேதான் 'கலையாத கல்வியும்' (பதிகம்), 'கல்விதரும் (69) என்றோதுகின்றார். 'அழ குதரும்' தெய்வ வடிவும் தரும்' என்கிறார்.

எத்தனை செல்வம், அழகு, அறிவு இருந்தும், அனுபவிக்க ஆன்ற நெஞ்சம் வேண்டுமன்றோ? அதனால் 'ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும்' (69) 'சலியாத மனமும்' (பதிகம்) எனக் குறிக்கிறார். மனமிருந்தும் மனமகிழ்ச்சி இல்லாது போவோர் எத்தனைபேர்; அமைதியும் ஆனந்தமும் தானே வாழ்வின் அடிப்படை. உள்ளுதொறும் களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரை புரண்டு' (82) என்கிறார்.

மகிழ்வு இருந்தென்ன' அதனைத் துய்க்க ஆயுள்வேண்டாமா? அதனால் 'குறையாத வயதும்' (பதிகம்) அளிப்பாள் எனப் பாடுகிறார். வயது மட்டுமா? இளமை மாறாது என்றும் பதினாறாக இருக்கவேண்டாவோ' 'குன்றாத இளமையும்' (பதிகம்) குறிப்பு காண்க. வாழ்வில் ஊன்றுகோலாக அமையும் நல்ல நட்பின்றேல் நலம் யாது? எனவேதான், 'நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும்' (69), 'ஓர் கபடு வாராத நட்பும்' (பதிகம்) என நல்லோர் இணக்கத்தைப் பாடுகின்றார்.

எல்லாம் பெற்று எண்ணற்ற நாட்கள் வாழ்ந்து யாது பயன்! நோய் நொடியில்லாதல்லவா இருத்தல் வேண்டும். 'கழுபிணியிலாத உடலும்' (பதிகம்) என்ற கூற்றினை உற்று

நோக்குக, 'கன்றாத வளமையும்' (பதிகம்) என்ற கருத்தும் கவனிக்க.

மனைவிதானே மனைக்கே மாட்சி; வாழ்க்கைத் துணை நலம் அவளும் மனம் மாறுபடாத அன்பு மாறாதவளாக அமைய வேணும். அத்தகு மனைவி அமைவாளாம். 'அன்பகலாத மனைவியும்' (பதிகம்). சரி, மங்கலமாம் மனைமாட்சி வாய்த்தாயிற்று, மற்று அதன் நன்கலமாம் நன் மக்கட்பேறு நம் கையிலா உள்ளது? 'மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே!' என்கிறதே புறப் பாட்டு. கொள்ளிவைக்கப் பிள்ளை இல்லையேல் பாவமாகக் கருதுமே இவ்வுலகு. இதனாற்றான் 'தவறாத சந்தானமும்' என்கிறார் பதிகத்தில்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் வள்ளுவர்; புகழெனின் உயிரும் கொடுக்குவர்' மன்ற உலகத்து மன்னு தல்குறித்தோர் தம்புகழ் நிறீஇ தாம் மாய்ந்தனரே' என அறம் கூறுகிறதே புறம். அத்தகு புகழும் செல்வாக்கும் தருவளாம்; 'தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்' (பதிகம்)

இப்படி எவ்வளவுதான் எடுத்துச் சொல்லுவது அதனால் ஓரே வார்த்தையில் 'நல்லன எல்லாம் தரும்' (69) என்கிறார் அம்மையை வழிபட்டால் பெறாத செல்வமே இல்லை, கைக்கு அகப்படா அரிய செல்வமே இல்லை என அடித்துக் கூறுகின்றார் பாருங்கள்.

.........சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

இனியெனக்குப் பொருந்தா தொருபொரு ளில்லை 90
சகல செங்களம் தரும் (பதிகம்)

குறிப்பாக ஒன்றினைப் பல் இடங்களில் பலனாகப் பேசுகிறார். வாழ்வில் 'இந்திர பதவி கிடைக்கப்போகிறதா என்ன? என மக்கள், பேற்றில் பெரும்பேறாகக் கருதும் 'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்' என ஆழ்வார் குறிக்கும் இந்திர பதவியே கிட்டும் என்கிறார்.

அவளைப் பணிமின், கண்டீர்! அமராவதி ஆளுகைக்கே 38

… … … அபிரா வல்லியடியிணையைப் பொன்
பயனென்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும்
சயனம் பொருந்து தமனியக் காவினிற் தங்குவரே 74

தங்குவர் கற்பக தாருவின் நீழலிற் 75

இரவும் பகலும் இறைஞ்சவல் லார், இமை யோரெவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமுங் கற்பகக் காவும் உடையவரே (83)

பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதந்தருமே (91)

… … … … நின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்களன்றோ?
செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்து.மேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்று, மிகு
திகிரியுல காண்டு, பின்பு
புகர்முகத்(து) ஐராவதப் பாக ராகி, நிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ, விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர் (பதிகம்)

என அன்னை வழிபடுபவனின் முடி மணியாக இந்திரபதத்தினை இயம்புகின்றார்.

இதுகாறும் வழிபடுவதால் வரும் பெரும் பயன் கூறினார் இனி ஒரு பாடலில் அன்னையை உன்னாதவர் எய்தும் இழிநிலையும் கூறுகிறார். நிலைகெட்டுக் குலைந்து அலைந்து திரிந்து பிச்சை எடுக்கும் கடைநிலைக்கும் ஆளாவர் என அச்சம் தோன்ற ஆணித்தரமாகக் கூறுகிறார்.

… … நின் றேற்றம்ஒரு
மாத்திரைப் போது(ம்) மனத்தில்வை யாதவர், வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி குணம்குன்றி, நாளும் குடிகள்தொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குஉ ழ லாநிற்பர் பாரெங்குமே (67)

இவ்வளமும் உணர்ந்த நாம், அனைத்துப் பலன்களையும் செறிவுடன் செப்பிடும் முப்பெரும் பாடல்களை மனத்தில் கொள்வது நன்று. ஒன்று 'தனந்தரும் கல்விதரும்…எனத் தொடங்கும் அபிராமி அந்தாதிப்பாடல்(69); மற்றொன்று,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

வள்ளுவர் வாய்மொழியில் வள்ளலார்

சைவப்புலவர். புலவர். திரு. மு. பரசுராமன் அவர்கள்
செஞ்சி. (தெ. ஆ. மா.)

3, (புலால் மறுத்தல்)

முகவுரை:

> ''அன்பகத்(து) இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
> வற்றல் மரம்தளிர்த் தற்று''
>
> ''அன்பின் வழிய(து) உயிர்நிலை அஃதிலார்க்(கு)
> என்புதோல் போர்த்த உடம்பு''

என்பன வள்ளுவம். இத்தெய்வப்புலவரின் அரிய, சீரிய நெறியிலேயே, திருமருதூர் திருவருட்பிரகாச இராமலிங்க வள்ளலார். தமது உண்மைகளின் ஒன்றான 'ஜீவகாருண்யம்' என மேற்கொண்டு போற்றினர். ஜீவகாருண்யமே முத்தி அடைவதற்கு முதற்படியாய் இருப்பது: அருள் கோட்டையின் திறவுகோலாக இருப்பது.

'ஜீவகாருண்யம்' என்பதின் பொருள்:

கடவுளுடைய பெருமையையும் தரத்தையும், நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்து, அன்னிய உயிர்களுக்குத் (மக்கள், மாக்களுக்கு) துன்பம் உண்டாகாது அன்பும் கருணையும் காட்டுதலேயாம். ஜீவகா

(முன் பக்கத் தொடர்ச்சி)

'கலையாத கல்வியும்......என நீளும் அபிராமி அம்மைப் பதிகத்தில் உள்ள அற்புதப்பாட்டு; இன்னொன்று அன்னையை வழிபடுவதால் பதினாறு பேறுகளும் பயன்களாக எய்தலாம் என்பதுணர்த்தும் – 'சகல செல்வங்களும் தரும்....பதிகத்தின் இறுதிப்பாடல்.

இத்துணையும் ஓர்ந்த நாம், நலமும் வளமும்பெற, இனியேனும் அபிராமி அம்மையை வழுத்தி அனைத்துப்பேறும் பெறுவோமாக!

ருண்யத்தால் நாம், மலரோன் (பிரமன்) வாழ்நாளேயும் பெற லாம். எங்ஙனமெனில்? கடவுள் ஒரு கருணைக் கடலாய், கரு ணாநிதியாய் விளங்குபவன்; எல்லா வலிமைகளும் உடைய வன். ஆகையால், அவனடியாராகிய நம்மையும் எல்லா உயிர் களிடத்தும், கருணையுடையவர்களாகவும், எல்லா வலிமை யுடையவர்களாகவும் விளங்கும்படிச் செய்வன்.

மேலும் எந்த உயிர்களிடத்தில் தயவு எனும் கருணை விளங்குகிறதோ அந்த உயிர்களிடத்தில் கடவுள் விளக்கம் பெற்றிருக்க விளங்குவார், மற்றவர்களுக்குப் புலப்படார். கருணை என்பது இரண்டு வகை. 1. பதிக்கருணை. 2 பசுக் கருணை. பதிக்கருணை என்பது இறந்த உயிரை எழுப்புதல், தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், உயிர்சட்கு உணவு முறையின் ஊட்டல் முதலியனவாம். பசுக்கருணை என்பது, தன் சக்தியினளவு உயிர்க்கு உபகரித்தல் அல்லது ஆன்ம நேய சம்பந்தம் பற்றிக் கருணை வடிவாயிருத்தலாம்,

ஜீவகாருண்யத்தின் படிகள்:

ஜீவகாருண்யத்தின் இன்றியமையாப்படிகளாகவிளங்குவன 1. அன்பு 2. கொல்லாமை 3 புலால்மறுத்தலாம். இவை ஒன் றிற்கொன்று தொடர்புடையன. அன்பு உண்டேல் கொல் லாமை உண்டு. கொல்லாமை உண்டேல் புலால் மறுத்தல் உண்டு. ஆனல் இக்கொள்கையை உணர்ந்தோரும் அன்பு கொல்லாமை மேற்கொள்ள வேண்டியது. தான் என்றெண் ணிக் கொண்டு புலாலை விரும்பி உண்ணுத நாட்களே தமக் கில்லை என்றிருப்போரும் உண்டு. எனவே தான், திருவள் ளுவ நாயனர், கொல்லுதல் தொழிலைத்தாம் செய்யவில்லை; யாரோகொன்றூர்; யான் அவரிடம்தான் வாங்கி வந்து புலாலை உண்கிறேன்; எனக்கென்னபாவம் என்றிருப்பாரை நோக்கி, புலால் அறவே உண்ணுதலை வெறுத்தொதுக்க வேண்டும் எனறெண்ணி, அதற்கென்று அன்புடைமை, அருளுடைமை என்றும் அதிகாரங்கள் தாம், படைத்திருந்தும் 'புலால் மறுத் தல்' என ஓர் அதிகாரமும் தனித்துப் படைத்தார்.

புலால் மறுத்தல் பற்றி வள்ளுவர் கூறுவன,

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிதுஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" 251

"பொருள் ஆட்சி போற்றாதார்க்(கு) இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு" 252

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்". 253

"அருள்அல்ல(து) யாதுஎனில் கொல்லாமை கோறல்
பொருள்அல்ல(து) அவ்வூன் தினல்" 254

"உண்ணாமை உள்ள(து) உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா(து) அளறு" (அளறு-நரகம்) 255

"தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார்இல்" 256

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்" 257

"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்" 258

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" 259

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்." 260

என்னும் இவ்வருமைப் பத்துக் குறட்பாக்களில் கூறியுள்ள கருத்தினை உற்று நோக்கி யுணர்வார்க்கு இதனுண்மை விளங்கும். இன்னும் இக்குறட்பாக்களின் சொல் நயங்கள் மிகவும் அருமையுடையனவாம். சான்றாக, முதற் குறளில் "தன்னுடைய உடம்பை வீக்குதற் பொருட்டுத்தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பார்க்கு. எங்ஙனம் ஆளும்அருள் (எவ்வகையான் நடத்தும் அருளினை) என்றும், எங்ஙன மாளு மருள் (அவர்க்கு எங்ஙனம் காமம், வெகுளி, மயக்கம் என்னும் குற்றங்கள் மாளும் (நீங்கும்) என்றும் பொருள் பயப்பன சுவையுடைத்தாம். மேலும் கூறின் விரியும் என்றஞ்சி விடுக்கின்றோம்.

இந்நிலையில் இராமலிங்க வள்ளலார்:

இத்தகைய மேலான அறமாக விளங்கும் கொல்லாமையும், புலால் மறுத்தலையும் வள்ளுவரின் வாய்மொழிவழி நின்

றுணர்ந்து, இராமலிங்க வள்ளலார் உலகத்தார்க்கு எடுத்து ணர்த்தும் பாங்கு மிகவும் அருமையும் பெருமையும் உடைத் தாம், 'ஏத்தேன் சிறுதெய்வம்' என மணிவாசகப் பெருமான் கூறுமாபோல், வள்ளலாரும் அச்சிறுதெய்வங்கட்குப் பலி கொடுக்கும் வழக்கினை மிகவும் கடிந்து ஒதுக்குகின்றார்.

> "நலிதரு சிறிய தெய்வமென் றையோ
> நாட்டிலே பலபெயர் நாட்டிப்
> பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
> பலிக்கடா முதலிய உயிரைப்
> பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
> புந்திநொந்து உளம்நடுக்குற்றேன்
> கலியுறு சிறியதெய்வ வெங்கோயில்
> கண்ட காலத்தினும் பயந்தேன்"

(குக்குடங்கள் – கோழிகள். புந்தி – அறிவு.)

> "துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
> தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
> கண்ணினால் ஐயோ! பிறவுயிர் பதைக்கக்
> கண்ட காலத்திலும் பதைத்தேன்
> மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
> வகைகளும் கண்டபோது எல்லாம்
> எண்ணி என்னுள்ளம் நடுங்கிய நடுக்கம்
> எந்தைநின் திருவருள் அறியும்."

என்னும் இப்பாடல்களால் சிறுதெய்வங்கட்குப் பலிகொடுப் பதையும், அங்ஙனம் வேண்டும் சிறுதெய்வக் கோயில்களையும் வள்ளலார் வெறுப்பதையும், காணலாம். இதனாலன்றோ இக் காலத் துறவிமார்களுட் சிலர், பசுவதைத் தடுப்புச் சட்டம் கொணர வேண்டுகின்றனர். மேலும் வள்ளலார், ஓருயிர்பிறி தோருயிரைக் கொல்வதையும் மீன், பறவைகள் முதலியவை தூண்டில்கள், கண்ணிகள் மூலம் பிடிப்பதையும் வெறுப்ப தோடு அதைக் காணுந்தோறும் உள்ளம் நடுக்கமுறுவதாகக் கூறுகின்றார்.

இக்கருத்துக்கள்,

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்"

> "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு."

என்பன போன்ற வள்ளுவரின் வாய்மொழி நின்று கூறிய கருத்துகளாம்.

"கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது
குலத்தாரே நீஎனது குலத்துமுதன் மகனே
மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கவென வாழ்த்திய என் குருவே!
நிலைவிழைவார் தமைக்காக்கு நித்தியனே எல்லா
நிலையும்விளங் குறஅருளில் நிறுத்தியசிற்குணமே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்ற மணிப்பொதுவில்
புனிதநடத் தரசே!என் புகலும் அணிந்தருளே!"
(மணிப்பொது – சிதம்பரம்),

"உயிர்க்கொலையும் புலைப்பசியும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறவினத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்து மற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம் அவர் அடையளவும் இதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றவருளிறையே
மயர்ப்பறுமெய்த் தவர் போற்றப் பொதுவில் நடம்புரியும்
மாநடத்தென் னரசே! என்மாலை யணிந்தருளே".

என்னும் இப்பாடல்களால், புலாலையறியாப் பெருந்தவத்தோர்களே உமது குலத்தோர்; கொலைத்தொழில் செய்வாரெல்லாம் உமது குலத்தோரல்லர்; சிற்றம்பலத்தில் நடம் புரியும் பெருமானே! என்று கொலை புரிவாரை வெறுத்தும், புலால் உண்பாரை இடித்தும் கூறுவதைக் காணலாம். மேலும், பொதுவில் நடம்புரியும் பெம்மானே! கொலை புரிவாரும், புலால் உண்பாரும், சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகுபவரல்லர்; அவர்கள் புறவினத்தைச் சேர்ந்தவர்களென்றும், ஆனாலும் அப்புறவினர்த்தார்க்கும் 'பசிதவிர்த்தல்' என்பதாகவே அருள்புரிக என்றும் வள்ளலார் பெருமான் வேண்டுகின்றார்.

எனவே, இங்குக் காட்டிப்போந்த கருத்துக்கள் யாவும், வள்ளுவரின் வழிநின்று வந்த கருத்துக்களேயாம் என்பது இவ்விரண்டின் உண்மை நோக்கி உணர்வார்க்குத் தெற்றெனப் புலனும். மேலும், வள்ளுவரின் வழிநின்று கொலை, புலை தவிர்த்தல் பற்றிக்கூறிய பாடல்கள் எண்ணிறந்து கிடப்

பினும், அவை ஈண்டு விளக்கின் பெருகும் என்றஞ்சிச் சிலவே காட்டிப் போந்தாம்.

முடிப்புரை:-

எனவே, நானில மக்கள் "கருணையும் சிவமே பொருள் எனக் காணும் காட்சி" பெற வேண்டுமெனில் கொலையும், புலையும் தவிர்த்தல் வேண்டும் கொலை, பஞ்சமகா பாதங் களின் ஒன்றுதலால், இவை நீக்கினுல்தான், கருணையுஞ் சிவமே பொருளெனக்காணும் காட்சிபெற முடியும். யான், "வள்ளுவர் வாய்மொழியில் வள்ளலார்" எனும் தலைப்பிய கட்டுரை எண்–(1) அடக்கமுடைமை, (2) பொருள் நல் வாமை, (3) புலால் மறுத்தல் எனும் பிரிவுகளாக வள்ளு வரின் வாய்மொழியின் நின்று வள்ளலார் பகுத்துக் கூறியிருப் பதை இங்ஙனம் கூறியிருப்பது போல் இன்னும் பல ஒப்பு மைக் கருத்துக்கள், வள்ளலார், திருவருட்பாவில் பரக்கக் கூறியுள்ளார். அவற்றை எல்லாம் சைவச் சான்றோர் முதல் அனைவரும் கண்டு களிக்க வேண்டுகின்றேன். குறிப்பாகச் சமரச சன்மார்க்கச் சங்கத்தார் கண்டு களித்தல் பெரிதும் பயனுடையனவாம். மேலும், இராமலிங்க வள்ளலார் உணர்த்தியுள்ள கருத்துக்கள் அனைத்தும், சைவத் திருமுறை களையும், சைவச்சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண் டன என்பது எம் கருத்து. அவையும் கட்டுரை வடிவில் விரைவில் வெளிவர, திருவருளும், குருவருளும் துணைநிற்க வேண்டுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி ! *தனிப்பெருங்கருணை !!*

"ஆடிய பாதமறிய நானறியேன் அம்பலத்து அருட்பெருஞ்சோதி
கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக் கூறவும் கூசும் என்நாவே!"

சிவ சிவ]

இறை அன்பு

திரு, வே. பார்த்தசாரதி: B Sc அவர்கள்:
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி: [ஆசிரியர்]
ஸ்ரீவைகுண்டம்.

இன்றைய உலகம் ஒரு நவநாகரிக உலகம் – நாகரிக வளர்ச்சி நடைபோடுகின்ற உலகம். இவ்வுலக நடப்பின்ஒரு புறத்தே கனவிலும் கண்டிராத அளவிற்கு அறிவியலின் வியத்தகு சாதனைகளையும்,சாதாரண மனிதனின்தேவைக்கும் மேற்பட்ட, மேம்பட்ட வசதிகளையும் காண்கிறோம். மறுபுறத்தே சினிமா மோகம், குடி கெடுக்கும் "குடி" போன்ற கலிகாலக் கவர்ச்சிகளும், கவருடல் புகைபிடித்தல் போன்ற கேடுவிளைவிக்கும் சக்திகளும் நிறைந்து மலிந்து கிடப்பதை அறிகிறோம் இத்தகைய தீய சக்திகளின்–சூழ்நிலைகளின் விளைவாக ஆத்ம சுகத்தைத் தரவல்ல ஆன்மீக உணர்வு தழைக்க வழியின்றி தத்தளிக்கின்ற நிலைமையை உணருகிறோம். நிதானம், நீதி, நியாயம், நேர்மை, உண்மை உரைத்தல், நல்வினை தீவினை இவைகளை எண்ணி நடத்தல், இறைவனின் பால் அன்பு கொள்ளுதல் இது போன்ற அரியபல நற்குணங்களெல்லாம் ஏட்டளவிலும் பேச்சு அளவிலும் மட்டுமே இடம் பெற்றிருக்கக காண்கிறோம். உலக காரியங்களில் உழன்று துன்பப்படும் இந்நேரங்களில்ஒருகண நேரத்தைக்கூட நற்சிந்தனையில் இறைவனைப் – பற்றிய நல்லெண்ணத்தில் – ஆன்மீக அறிவு வளர்ச்சியில் பயன்படுத்த முடியாத நிலைமையைப் பார்க்கிறோம். இதனையே ஞா. மாணிக்கவாசகனுர் அடக்கம் என்ற கவிதையின் கண்மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறுர்.

"இந்த நூற்றுண்டு மானிட வாழ்வோ
இருளில் மறைந்த ஒளியாய்ப் போனது
அறிவியல் நிறைந்தது அணுவைப் பிளந்தது
இந்த நூற்றுண்டு மானிட வாழ்க்கை

எனினும் மனித இதயம் இழந்தது
இந்த நூற்றுண்டு மானிட வாழ்க்கை
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் இதயம்
இல்லா தொழியினும் வாழும் உலக மாந்தர்தம்
வாழ்வில் அன்பினை வளர்க்கும் பண்பும் இழந்தது
இந்த நூற்றுண்டு மானிட வாழ்க்கை
இந்த நூற்றுண்டு மானிட வாழ்வில்
அறிவும், மனமும் இருவேறுயின
எண்ணமும் இதயமும் எங்கோ சென்றன
ஒன்றுக் கொன்று முரண்பட மோதும்
முடிவிலாக் குழப்பக் குவியலாய்ப் போனது''

இறை அன்பு - பதத்திற்கான விளக்கம்:-

ஆழ்ந்த ஈடுபாடு அன்பு எனப்படும். அன்பே கடவுள் அன்பினுல் நல்லது பெறலாம். அன்புள்ள இடத்தில் பகைமைக்கும் தீய பண்புகளுக்கும் இடமில்லை. அதனுல்தான் ''அறத்திற்கே அன்பு சார்பு'' என்றுர் வள்ளுவர். அன்பு வடிவமாகிய ஆண்டவனை அறிவதற்கும்'அவனது அருளைப்பெறுவதற்கும் அன்பேதக்க சாதனமாகும். ''ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலா' இறைவன் பாற் இடைவிடாது கொண்டுள்ள ஈடுபாடு–பற்று–அன்பு ''இறையன்பு'' என அழைக்கப்படுகிறது இறையன்பு பரிபூரணமாகும் பொழுது ''பக்தி'' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. இத்தகைய தெய்வபக்தியே புனிதமானது – தூய்மையானது – தெய்வீகத் தன்மை வாய்ந்தது. இது எல்லா ஜீவராசிகளாலும் விருப்பத்துடனும் அன்புடனும் கடைப்பிக்கக் கூடியதொன்றுகும்.

இறையன்பும் அடியார்களும்:-

விருப்பு வெறுப்பு, உயர்வு தாழ்வு, இகழ்வு புகழ்வு, கஷ்டநஷ்டம் – இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஆண்டவனை, மெய்யன்புடன் உள்ளம் உருகி வழிபாடு செய்தவர்களுள் வைணவ சமயத்தைச் சார்ந்த ஆழ்வார்களும் சைவ சமயக் குரவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அவர்கள் இறைவனை மறவாத மனமுடையவர்கள் – இறைவனின் இதயத்தில் ஆழ்ந்த இடம் பெற்றவர்கள். அவர்கள் ஆண்டவனின் அருட்புகழை அல்லும் பகலும் சலிக்காமல் எடுத்துச்

சொல்லி மகிழ்ந்தார்கள். அவர்களது தேனினும் இனிய சுவை உடைய பாமலர்களில் பக்தி மணம் கமழ்கிறது - தெய்வீகத் தன்மை தவழுகிறது-இறையன்பின் இனிமை புலப்படுகிறது. அவர்களது வாழ்க்கை அறநெறியும், அவர்கள் இறைவன் வழிபட்ட தன்மையும், அவனிடத்து காட்டிய பேரன்பும், அவனே அடைய முயற்சித்த வழிகளும், அடியார்கள் பாற் கொண்டுள்ள அன்பும் தனிமனிதன் ஒவ்வொருவருக்கும் இறைவன்பாற் பற்றுள்ளம் கொண்டிட நல்லதொரு பாட மாகவும் தக்கதொரு எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளன.

இறையன்பு சிறக்க சிலபல வழிகள்:-

ஆண்டவனிடத்து அன்புள்ளம் கொள்வதற்கும், அவன் பால் இடைவிடாது கொண்டுள்ள ஈடுபாட்டினேச் சிறக்கச் செய்வதற்கும் தனிமனிதன் ஒவ்வொருவராலும் நாளும் எளி தில் கடைப்பிடிக்கக்கூடிய சிலபல அறவழிகளே ஈண்டுக் குறிப்பிடுவோம்.

1. "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை", "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்", எனவே முன்னோர்கள் கடைப் பிடித்த ஆசாரநெறியை, நல்ஒழுக்க நெறியை ஒவ்வொரு வரும் தம்மால் இயன்ற அளவு கடைப்பிடித்து அதன்படி நடக்க முயற்சித்தல் வேண்டும்.

2. கருணையும், தூயஉள்ளமும், மன்னிக்கும் தன்மையும், நேர்மையும், சாந்தியும் நிறைந்தவருடைய இதயமே இறை வனின் இருப்பிடம். ஆகையால் அன்புடமை, பண்புடமை, அடக்கமுடமை, கடமைஉணர்வு, உள்ளத்தூய்மை, உண்மை உணர்வு, நேர்மைத்திறம் போன்ற பல நற்பண்புகளே நாளும் தவருமல் கடைப்பிடிக்க வேண்டும்.

3. "உடம்பினைப் பெற்ற பயன் எல்லாம் உடம்பில் இவ் உத்தமனேக் காண்" என்பது ஔவை வாய்மொழி இதன் வழிஇறையன்பு உள்ளத்திஞல் நிறைவேற்றப்பட வேண்டிய காரியம் என்பது தெளிவாகிறது. எனவே ஒவ்வொரு தனி மனிதனும் ஆண்டவனே உள்ளத்தில் பரிபூரணமாக நினைந்து உருகி வழிபாடு செய்தல் வேண்டும்.

"நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்று தன்னையும் மறந்து சொல்லும் அளவிற்கு ஆண்டவனின் தன்மையைப் போற்றும் திருநாமங்களை மனமார எண்ணி வழிபடுதல் வேண்டும்.

4. கடவுளை வணங்குவதற்கு ஏற்பட்ட இடங்கள் ஆலயம் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று!' ஆகவே ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கு வசதிப்பட்ட அல்லது முக்கிய நாட்களிலாவது இறைவன் எழுந்தருளி இருக்கின்ற திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்தல் வேண்டும். மேலும் க்ஷேத்திரங்கள் என அழைக்கப் படும் புண்ணிய ஸ்தலங்கள் தோறும் சென்று இறைவழிபாடு நடத்துதல் வேண்டும்.

5. "வித்தகம் பேச வேண்டாம் பணிசெய வேண்டும்-' என்றார் சேக்கிழார் பெருமான். ஒவ்வொருவரும் தனக்கு கிடைத்த ஓய்வு நேரங்களில் இறைவன் எழுந்தருளியிருக்கின்ற தேவாலயங்களுக்குச் சென்று "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றவாறு உளமாற திருப்பணி செய்து மகிழ்தல் வேண்டும்.

6. ஆண்டவனின் அடியார்கள் நடமாடும் தெய்வம் ஆவார்கள். இறைவனை உள்ளன்போடும் நிராசையோடும் அர்ச்சித்து வழிபடும் அடியார்களுக்கு தொண்டு செய்யின் அஃது ஆண்டவனிடம் செய்ததற்கு ஒப்பாகும். ஆகையால் கிடைத்த நேரங்களை வீணாகச் செலவிடாமல் இறைவனின் புகழ்பேசும் அடியார்களுக்கு - மெய்யன்பர்களுக்கு திருத்தொண்டு செய்தல், வழிபாடு நடத்துதல் வேண்டும்.

7. ஆன்மா விலைமதியற்றது. ஆன்மா அழியாத செல்வம். எனவே தனிமனிதன் ஒவ்வொருவருக்கும் ஆன்மீக அறிவு அவசியம். அத்தகைய ஆன்மீக அறிவு வளர்ச்சி பெறுவதற்கு பரிபக்குவநிலை அடைவதற்கு இறைவனின் பெருமைகளை எடுத்துச் சொல்கின்ற சொற்பொழிவுகள், தெய்வீகப் பேரவைக் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு தனிமனிதனும் தவறாமல் பங்கு கொண்டு அறிவை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

8. பண்படுத்தாத நிலம் பயனற்றதாகி விடுகிறது. அது போல பண்படுத்தாத மனம் நல்ல பலனை நல்காது-முறைமையான பக்தி உள்ளத்தைப் பெறமுடியாது. ஆகவே இறைவனின் வல்லமையைப் பற்றி பேசுகின்ற வேத நூல்களையும் பயனுள்ள தெய்வீக மணம் கமழ்கின்ற பிற தத்துவங்களையும் கற்றுத் தெரிந்து நல்ல சீரான பக்தி உள்ளத்தைப் பெறல் வேண்டும்.

9. ஏழையைக் கண்டு இகழக்கூடாது. இறைவனின் மறு உருவம் ஏழை. ஏழைகளின் துயர் களைவதில் இறைவன் மகிழ்ச்சி அடைகிறான் - ஆனந்தம் கொள்கிறான். அறநெறியைப்பற்றி குறிப்பிடுமிடத்து வள்ளுவர் "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என மொழிகின்றார். எனவே எளிய ஏழை மக்களின்பாற் இரக்கம் கொண்டு அவர்களுக்கு உதவி செய்தல், தான தருமங்கள் செய்தல் போன்ற நற்காரியங்களில் ஒவ்வொரு தனிமனிதனும் ஈடுபடுதல் வேண்டும்.

இறை அன்பர்கள் சிறப்புறப் பல்லாண்டு வாழ்ந்துதிருத் தொண்டில் ஈடுபடுவதற்கும், வையகத்தில் நன்னெறியைச் சிறக்கச் செய்வதற்கும், தெய்வீகம் எங்கும் ததும்பி வழி வதற்கும் சமுதாயம் சிலபல அறவழிகளை மேற்கொள்ளுதல் அவசியமாகிறது. அவைகளுள் சிலவற்றை இனி காண்போம்.

1. சமுதாயத்தில் ஆங்காங்கே காணப்படும் கேடு விளைவிக்கும் தீய சக்திகள் பலவற்றை சமுதாய மக்கள் தகர்த்தெறிய முன்வர வேண்டும்.

2. கல்விக்கூடங்களிலும், அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் மற்றும் இதுபோன்ற எல்லா இடங்களிலும் தெய்வ திருஉருவப் படங்களை வைத்து வழிபாடு நடத்துதல் வேண்டும்.

3. விழா நாட்கள் பொதுவாக மக்களுக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தரவல்லது – தெய்வ சிந்தனையைத் தூண்டக்கூடியது. எனவே கலைமகள் விழா, சதுர்த்திவிழா போன்ற விழா நாட்களைக் கல்விக் கூடங்களிலும் அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் மற்றும் இதுபோன்ற எல்லா

இடங்களிலும் சிறப்புறக்கொண்டாடுவதற்கு சமுதாயமக்கள் வழி வகுத்தல் வேண்டும்.

4. அன்பை வளர்த்து, அன்பில் தோய்ந்து, அன்பின் முழுநிலையை எய்த முயலுவதே சமயமாகும். இத்தகைய சமயம் இறைவனுடன் தொடர்பு கொண்டிருத்தலே சமய நெறி ஆகும். சமயநெறி இம்மையைத் தூயதாக்கி மறுமைக்கும் அடிகோலுவதே ஆகும். இத்தகைய சமய நன்னெறியை மக்கள் மனதில் தளிர்க்கச் செய்யவல்ல சமயப்பிரச்சாரங்களை கற்றறிந்த வித்தகர்களையும், ஆன்மீக அறிவுடைய அறிஞர்களையும் கொண்டு நடத்துவதற்கு சமுதாயம் தக்க ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

5. ''கடவுளின் நினைப்பே கலைகளில் கலந்திடப்
பழகிய பெருமையே தமிழ்க் கலைப்பண்பு''

என்றார் நாமக்கல் திரு வே. இராமலிங்கனார். பழம்பெருமை வாய்ந்த கலைகளைப் பேணிப்பாதுகாத்திட சமுதாயம் முன்வரல் வேண்டும். தொன்மை மிக்கதும் கலைநுணுக்கம் மிக்கதுமான திருக்கோயில்களையும் கலை அழகு வழிகின்ற தெய்வத்திருஉருவச் சிலைகளையும் பாதுகாத்திட சமுதாயம் பொறுப்பேற்கவேண்டும்.

6. பக்தி மார்க்கத்தைப் பரவச்செய்வதிலும், பாமர ஏழை மக்களுக்கு உதவி செய்வதிலும் சமுதாய மக்கள் தம்மை அர்ப்பணித்தல் வேண்டும்.

இறையன்பு வீண் போகாது:-

''யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்''

என்றார் பாரதியார்.

அத்தகு சிறப்பு வாய்ந்த இறைவன் ஒருவன் உண்டென்று திடமாக நம்புபவர்களை அந்த இறைவன் கைவிடாமல் காத்து நிற்கிறான் – நல்லருள் செய்ய நாட்டம் கொள்கிறான்,

இதனையே குமரகுருபரர் ''நீதிநெறிவிளக்கம்'' என்னும் நூலில்.

"தெய்வம் உளதென்பர் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும். – தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலும் சொல்வார் பயன்"

என அழகாக கூறுகிறார்.

இதன் வழி "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்பது வெள்ளிடைமலை. இறையன்பு ஆத்ம சுகம் பெறுவதற்கும் முக்தியை அடைவதற்கும் ஒருநல்ல வழித்துணை அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவும் தக்கதோர் ஏணி - செல்வத்துள் தலையாய செல்வத்தைக் கொடுக்கவல்ல சஞ்சீவி.

மேலும், இத்தகைய பக்தியினால் உள்ளம் தூய்மை அடையும் – மனோபாவம் வானைப் போல் விரிவடையும் அகத்திலே அன்பின் சாயலைக் காணமுடியும் - அறிவிலே தெளிவு ஏற்படும் - இன்னல்களும் கவலைகளும் நம்மை விட்டு நீக்கும் அமைதி நிலை ஏற்படும் - மனம் தன்னிறைவு பெறும் – புத்துணர்ச்சியுடன் தோன்றும் – நெஞ்சிலே வரமும் உறுதியும் ஏற்படும் – தன்னம்பிக்கையும், துணிவும், தைரியமும் பிறக்கும் – மாசற்ற நல்லெண்ணம் தழைத்தோங்கும் – பொறிகளின் மீது தனி அரசனை பெறமுடியும் – பொழுதெலாம் பேரருளின் நெறியிலே நாட்டம் ஏற்படும் – உண்மையின் அரிய பேருண்மையை உணர முடியும் – ஆன்மீக உணர்வில் நாட்டம் ஏற்படும்–ஒரு சிறிது நேரமாவது இந்த உலகத்தை விட்டு விலகி இயற்கையோடு ஒன்றி இருக்க முடியும் நீங்காத அருட்செல்வம் நிறைந்து விளங்கும்-சகலகாரியமும் சித்தி ஆகும்.

இத்தகைய வற்றாத அருள் ஊற்றாய் விளங்குகின்ற இறைவனின் பால் அன்பு நெறி வளர்வதற்கும், இறை அன்பெனும் ஒளிவிளக்கு மக்கள் மனதில் அணையாமல் காப்பதற்கும் அநுதினமும் தவறாமல் உழைப்போமாக! அன்புப் பயிர் வளர்ப்போமாக!!

வளர்க இறையன்பு வாழ்க தெய்வீகம்
வளர்க இவ்வையகம் வாழ்க தெய்வ பக்தர்கள்

[சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில்
விநாயக சதுர்த்தி ஏறுபடி நிதி ரூ. 5,000.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் ஆண்டு தோறும் ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயக சதுர்த்தி ஏறுபடி வழிவழி நடத்தப்பெற்று வருகிறது. அங்ஙனமே ஷெ விநாயக சதுர்த்தி ஏறுபடி இனியும் ஆண்டு தோறும் ஸ்ரீகாசிமடத்தில் நடத்துவித்தற்பொருட்டு இம்முதற்பொருள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 25-ஆவது தருமமாக நிறுவப்பெற்றது. இது "திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் விநாயக சதுர்த்தி ஏறுபடி நிதி" எனப்பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5 000/- (ரூபாய் ஐந்தாயிரம்). இது ஆண்டொன்றுக்கு $7\frac{3}{4}\%$ வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 61 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். சி. 560109 தேதி 2—7—1973, ரூ 5,000/ இது நம்மாலும் நமக்குப்பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3 இம்முதற்பொருளினின்று ஆண்டுதோறும் வரக்கூடிய வட்டித்தொகையில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய நிர்வாகச்செலவுகள் போக எஞ்சியதொகை முழுவதும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் ஆண்டு தோறும் ஆவணி மாதம் வளர்பிறைச் சதுர்த்தி நாளில் விநாயகசதுர்த்தி ஏறுபடி நடத்துவித்தற்குப் பயன்படுத்தப்பெற்று வரும்.

4. வட்டி வருமானத்திற்கு ஏற்பவும் பொருள்களின் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் ஆண்டு தோறும் தயாரிக்கப்பெறும் திட்டஜாப்தாவின்படி இவ்விநாயக சதுர்த்தி ஏறுபடி திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் நடத்தப்பெற்று வரும்.

5. இவ்வட்டி வருமானம் வேறு எந்த முறையிலும் செலவு செய்யப்பெற மாட்டாது. இம்முதற்பொருள் நம்

பேரிலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற்பொருள் திருப்பியளிக்கப் பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய நீண்டகால முதலீடு களிலோ அல்லது அரசியல் கடன்தாள்களிலோ முதலீடு செய் யப்பெற்று வரும்.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை''

Tirupanandal
16—6—1973 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at Tiruvidaimarudur Sub Registrar's office on 6—7—1973 as document No. 26/1973 Book 4, Volume 59 pages 101 to 102.

மூன்றும் திருமுறையின்
முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

51, திருவாலவாய் — பண்: கௌசிகம்

செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அமணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே.

பொழிப்பு: நடுநிலை உடையவனே! திருவாலவாயின்கண் எழுந்தருளியுள்ள தலைவனே! என்னை அஞ்சற்க என்று சொல்லி அருள் செய்வாயாக. பொய்யர்களாகிய சமணர்கள் இம்மடத்திற்குக் கொளுத்துகின்ற தீச்சுடர் மெதுவாகச் சென்று பாண்டியன்பால் ஆவதாகுக.

செம்மை + அன் = செய்யன்; செம்மை—நடுவுநிலைமை; ஒப்பநாடி அதற்குத்தகச் சமணரை ஒறுக்க வேண்டும் என்னும் குறிப்பால் செய்யனே என்றார். மங்கையர்க்கரசியார் மனம் நோவாமைப் பொருட்டுப் பையவே சென்று பாண்டியற்காக என்றார். ஞானசம்பந்தர், தாம் மதுரையில் தங்கியிருந்த திருமடத்துக்குச் சமணர் தீக்கொளுவியபோது இப்பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்தைச் செப்பவல்லவர் தீதிலாச் செல்வராவார்.

—

(தொடரும்)

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

உ

சிவ சிவ

தஞ்சாவூரில் சிவபாதசேகரன் இராசராசசோழன் நினைவு

இன்னிசைத் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது

பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 20-ஆம் நாள்
5—11—73 ஐப்பசிச் சதயம் திங்கட்கிழமை

தஞ்சாவூரில் தஞ்சைப் பெருவுடையார் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிப் பிரகதீசுவரர் உலாவரும் வீதிகளில் இரவு முழுவதும் இன்னிசைத் திருமுறைபாடி மீண்டும் காலை 6 மணிக்குத் தஞ்சைப் பெருவுடையார் சந்நிதியில் பூர்த்தி செய்யப்பெறும்

திருமுறைவாணர்கள்:

1, சுரலய இசைவள்ளல் திரு. எம். கனகசபைப் பிள்ளை,
ஸ்ரீ காசிமடம் சிவசிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.

2. சங்கீதபூஷணம் திரு. M. சுப்பிரமணிய முதலியார்,
தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.

3. சங்கீதபூஷணம் திரு. P. சாமிநாத முதலியார், சென்னை.

4. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திரு. டி. எம்.
விசுவலிங்க சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.

5. தேவார இசைமணி திரு. S. முத்துக் கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.

6. இசைநம்பி திரு. S. கல்யாணசுந்தரதேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், கும்பகோணம்.

7. திரு. T. M. கிருஷ்ணன், பிடில், கும்பகோணம்.

8. திரு. S. கோபாலன், வேய்ங்குழல், திருப்பனந்தாள்.

9. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்.

By Order of His Holiness
S. முருகேசம் பிள்ளை,
காறுபாறு.

உ
சிவ சிவ

கருவூர்த்தேவர் திருவிசைப்பா: 9-ம் திருமுறை
தஞ்சை இராசராசேச்சரம்: பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பருதி
யொன்றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் திங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே. (1)

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பி னிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொன் மாலையீ ரைந்தின்
பொருண்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடுங் குன்றுடை யோரே. (11)

திருநாவுக்கரசர் தேவாரம்; திருநல்லம்: திருக்குறுந்தொகை

அல்ல லாகவைம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாயநம வென்று
நல்ல மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

திருச்சிற்றம்பலம்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

திருக்கொள்ளம்பூதூரில் ஓடோற்சவ விழா
திருநெறிய தேவாரத் திருமுறை கோஷ்டி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்களால் நடத்தப்பெறுவது

பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 10௳ வெள்ளிக்கிழமை
27—10—73 இரவு 10 மணியளவில்

திருமுறைவாணர்கள்:

1. சங்கீதபூஷணம் திரு, M. சுப்பிரமணிய முதலியார், தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்
2. இன்னிசைப்பண்மணிகள் திரு. T. M. விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.
3. தேவார இசைமணி திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர், ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
4. ஆடல்மாமணி திரு. S. சட்டைநாத முதலியார், திருமுறைப்பணி, திருப்பனந்தாள்.
5. திரு. ந. சுப்பிரமணிய தேசிகர், திருமுறைப்பணி, திருக்கொள்ளம்பூதூர்.
6. திரு. S. A. கோபாலன், வேய்ங்குழல், திருப்பனந்தாள்.
7. திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம், திருப்பனந்தாள்.

R. **கோவிந்தராஜன்**
நிர்வாக அதிகாரி
ஸ்ரீவில்வாரண்யேசுவரசுவாமி
தேவஸ்தானம்
திருக்கொள்ளம்பூதூர்

By Order His Holiness
S. **முருகேசம் பிள்ளை**
காறுபாறு
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

குறிப்பு:– திருமுறைப்பணி இரவு 10 மணி முதல் 2 மணி வரையில் திரு வீதியுலாவிலும் இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை ஓடோற்சவ விழாவில் ஓடத்திலும் நடைபெறும்.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

ஓடம் விட்ட அற்புதப் பதிகம்

திருஞான சம்பந்தர் தேவாரம் — ஈரடிமேல் வைப்பு — பண்: காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1. கொட்டமே கமழுங் கொளளம்பூதூர், நட்ட மாடிய நம்பனையுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ, நல்கு மாறரு ணம்பனே.

2 கோட்டகக் கழனிக் கொள்ளம்பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல வுந்துகசிந்தையார் தொழ
நல்கு மாறரு ணம்பனே.

3 குலையினர் தெங்குசூழ் கொள்ளம்பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார் தொழ
நல்கு மாறரு ணம்பனே.

4 குவளை கண்மலரும் கொள்ளம்பூதூர்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

5 கொன்றை பொன்சொரியும் கொள்ளம்பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

6 ஓடம்வந் தணையும் கொள்ளம்பூதூர்
ஆடல் பேணி அடிகளை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

7 ஆறு வந்தணையும் கொள்ளம்பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

8 குரக்கினம் பயிலும் கொளளம்பூதூர்
அரக்க னைச்செற்ற ஆதியை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

9 பருவ ராலுகளுங் கொள்ளம்பூதூர்
இருவர் காண்பரி யான்கழ லுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

10 நீரகக் கழனிக் கொள்ளம்பூதூர்
தேரமண் செற்ற செல்வனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறரு ணம்பனே.

11 கொன்றைசேர் சடையான் கொள்ளம்பூதூர்
நன்று காழியுள் ஞான சம்பந்தன்
நின்று சொன்மாலை கொண்டேத் தவல்லார் போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ
சிவ சிவ

காஞ்சிபுரத்தில் கந்தபுராணப் பிரசங்கங்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடைபெறுவது

காஞ்சிபுரம் குமரகோட்டத்தில்

கந்தபுராணப் பிரசங்கங்கள்

27—10—1973 முதல் 1—11—1973 முடிய
பிரமாதீச வருஷம் ஐப்பசித் திங்கள் 11உ முதல் 16உ முடிய

ஆறு பிரசங்கங்கள்

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் செயலர்
திரு. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள்
நாடோறும் மாலை 6-30 முதல் 8-30 வரை

கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவார்கள்

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

S. கோவிந்தன்,
இறைபணியாளர்
குமரகோட்டம்,
காஞ்சிபுரம்

இங்ஙனம்,
K. சுப்பிரமணிய அய்யர், B. A.,
தியாகராஜ விலாசம், சென்னை—5

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் ஆணையின் வண்ணம்

காஞ்சிபுரத்தில் நடைபெறும் தருமங்கள்

காஞ்சிபுரத்தில் உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி பயிலும் பெண்களுக்குத் தேவாரப் பரிசுகள் அளிக்கப்பெறுகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் நினைவில் சோமசுந்தர கன்யாவித்தியாலயா உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளில் நால்வருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பெறுகிறது. மாசிமிருகசீரிட நாளில் கச்சியப்பசிவாசாரியர் நினைவிலும், பங்குனி சுக்லபட்சம் துவிதியையில் ஸ்ரீ சாமிநாத சுவாமிகள் நினைவிலும், வைகாசி அமரபட்சம் திருதியை ஆகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளிலும், ஆவணி மூலநாளிலும் சிறப்பு அன்னம்பாலிப்புக்கள் நடத்துவதோடு, நாடோறும் சிவாச்சாரியர் அறுவர்க்கு அன்னம்பாலிப்பு நடைபெறுகிறது. ஸ்ரீ ஏகாம்பர நாதருக்கு மாதந்தோறும் ஒருநாளிலும், ஆவணி மூல நாளிலும் புனுகு சட்டம் சார்த்தப்பெறுகிறது. கச்சியப்ப சிவாசாரியர் நினைவில் பசுப்பரிசும், சிவாசார்ய பட்டர் ஒருவருக்குக் காசியாத்திரை உதவியும் அளிக்கப்பெறுகிறது. திருவேகம்பப் பெருமான் பங்குனி உத்திரப் பெருவிழாவில் 13-ம் திருநாளில் தேவாரகோஷ்டி நடத்தப் பெறுகிறது. கந்தர் சஷ்டி விழாவில் குமரகோட்டத்தில் கந்தபுராணப் பிரசங்கங்கள் நடைபெறுகிறது. ஒரு ஓதுவார் நியமிக்கப்பெற்று நாடோறும் திருவேகம்பப் பெருமான் திருக்கோயிலில் திருமுறை விண்ணப்பம் நடைபெற்றுவருகிறது.

ஸ்ரீ காசிமடம் **திருப்பனந்தாள்**

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

மதுரையில் கந்தபுராணப் பிரசங்கங்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களின் ஆணையின் வண்ணம் நடைபெறுவது

மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் ஆடிவீதி

பன்னிரு திருமுறை மன்றத்தில்

கந்தபுராணப் பிரசங்கங்கள்

27—10—1973 முதல் 1—11—1973 வரை

பிரமாதீச வருஷம் ஐப்பசி திங்கள் 11உ முதல் 16உ வரை

ஆறு பிரசங்கங்கள்

சித்தாந்தவித்தகர் கயப்பாக்கம்

திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

நாடோறும் மாலை 6–30 முதல் 8-30 வரை

கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவார்கள்

இருப்பரங்கு உறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

இங்ஙனம்

சிவநெறிச் செம்மல், சிவதர்ம பாஸ்கர

ம. க. சுந்தரேச பட்டர்

ஆசிருதம்

(ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்)

48, வடக்காவணிமூலவீதி, மதுரை

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம்

மதுரையில் நடைபெறும் தருமங்கள்

மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் தேவஸ்தானத்தில் சித்திரை மாசத்தில் 24 நாட்கள் திருவிளையாடற் புராணப் பிரசங்கங்களும், ஆடிசுவாதியை ஒட்டி 9 நாட்கள் பெரியபுராணப் பிரசங்கங்களும், ஸ்கந்தசஷ்டி விழாவில் கந்தபுராணப் பிரசங்கங்களும் தக்க புலவர்களைக் கொண்டு நிகழ்த்தப்பெறுகிறது. திருமுறைப் பரிசுகளும், ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானக் கட்டளையிற் கண்டவண்ணம் உதவி மூலதனம் ஏற்படுத்தப் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பரிசுகளும் மதுரையில் உயர்நிலைப்பள்ளி மாணவிகட்கு அளிக்கப் பெறுகிறது; திருவாசகப் பரிசுகளும், முதுமொழி மேல்வைப்புப் பரிசுகளும் மதுரை உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு அளிக்கப்பெறுகிறது; சிறந்த பசுக்கள் இரண்டிற்குப் பரிசுகள் அளிக்கப் பெறுகிறது; நான்கு சிறந்த நாட்களில் சொக்கலிங்கப் பெருமானுக்குச் சந்தன மெய்ப் பூச்சு நடத்தப் பெறுகிறது; ஓதுவார் ஒருவர் நியமிக்கப் பெற்று நாடோறும் திருமுறைப்பாராயணம் நடைபெறுகிறது; மூர்த்தி நாயனர் திருநாளில் திருவிழா நடத்தப் பெறுகிறது. நாடோறும் ஆறு சிவாசாரியார்கட்கும், ஆவணி மூலநாளிலும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளாகிய வைகாசி அமரபக்ஷ திருதியையினும் அந்தணர் அருந்தவர் ஏழைகட்கும் அன்னம் பாலிப்பு நடத்தப் பெறுகிறது; சிவாசார்ய பட்டர் ஒருவருக்குக் காசியாத்திரை உதவி அளிக்கப் பெறுகிறது; ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவு நாளில் மதுரைக் கோயில் பொற்ருமரையில் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையிலும், ஆவணி மூலவீதிகள் நான்கிலும் இரவு 8 மணி முதல் விடியல் 6 மணி வரையில் தேவார அகண்ட பாராயணம் நடத்தப் பெறுகிறது மதுரைக் கல்லூரியில் நீதிநெறிவிளக்கப் பரிசுகள் அளிக்கப் பெறுகிறது; மார்கழித் திருவாதிரை நாளில் அபிஷேகம் செய்த பட்டருக்கும் படிக்காசு அளிக்கப் பெறுகிறது; மகாசிவராத்திரி நாளில் மீனாட்சி சுந்தரேசுவரர்க்கு ஒரு யாமத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறுகிறது. நாடோறும் சொக்கலிங்கப் பெருமானுக்கு நெய்விளக்கு ஏற்றப் பெறுகிறது.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள்

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. பை.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ...	3 50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ...	0 40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ...	0 20
4	,, மதுரைக்கலம்பகம் ,, ...	0 40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ...	0 60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ...	1 25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ...	0 50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ...	0 50
12	,, மூலம் ...	0 10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0 15
14	கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ...	0 10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ...	0 05
16	மூவர் தேவாரம் அடங்கன்முறை-தலமுறை ...	8 75
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	4 25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ...	2 75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ...	1 75
20	திருவாசகம் (மூலம்) ...	0 75
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ...	3 50
22	9—ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ...	0 50
23	,, ,, தெளிவுரை ...	1 50
24	திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ...	2 50
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ...	2 50
26	பெரிய புராணம் மூலம் (அச்சில்) ...	
27	திருத்தொண்டர் புராணசாரம் ...	0 40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0 25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ...	0 50
30	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
31	பழமொழித் திருமுறை ...	0 25
32	அப்பர்விழா வெளியீடு ...	0 25
33	Hymns and Proverbs ...	0 35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள் ...	0 10

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.
Regd No. M 5574

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும்	...	0 30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
37	திருவாசகம் தேனும் கனியும்	...	0 15
38	தேவாரம் பாடும்பயன்	...	0 15
39	காசிக்கலம்பகம் உரை நடை	...	0 15
40	தாழைத் திருமுறை	..	0 15
41	ஐந்து நீதி நூல்கள்	..	0 10
42	நவக்கிரகமாண்பு	..	0 25
43	ஸ்ரீ சைலம்	...	0 10
44	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள்	...	0 37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி	...	0 10
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு)	...	2 00
48	திருக்குறள்-உரைக்கொத்து-பொருட்பால் (2-ம் பதிப்பு)	..	2 75
49	தேவார வைப்புத்தல விளக்கம்	...	0 15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது)	...	2 00
51	திருக்குறள் மூலம்	...	0 25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை	..	0 20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	..	0 13
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	..	0 60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	..	1 50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,,	..	1 00
	ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன்	...	1 25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன்	..	1 00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு)	...	0 50
62	மங்கலம்	..	0 20
63	திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும்	..	0 20
64	கோதனத் திருமுறை	..	0 10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன்	...	0 15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை	...	0 15
67	மகேசுவரபூசை	...	0 15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர்	...	0 10
69	திருவிசைப்பா தேனும் கனியும்	...	0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**
2. **"தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -73.